விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
(C-5088)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 05 சனிக்கிழமை (19.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

# தமிழ் மக்களுடன் உறவை பேண விரும்புகின்றோம்

## அமைச்சர் மனோ கணேசனுடனான சந்திப்பில் சீன தூதுவர் உறுதி!



(கொழும்பு) இலங்கை மக்களுடனான தமது உறவு சிங்களம் பேசும் மக்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான சீன தூதுவர் செங் யுவான், தமிழ் மொழி பேசும் மக்களையும் தமது உறவு வலயத்தில் வைக்கவே விரும்புவதாகவும் கூறியுள்ளார். அமைச்சர் மனோ கணேசனுடன் நடந்த சந்திப்பின் போதே இதனை தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் பதவி இப்போது எம்மிடம்

### மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வடக்கு பிரதேசத்திற்கு மாத்திரம் வரையறுத்துக் காணப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவி நேற்று முழு நாட்டுக்கும் உரித்துடையதாகியுள்ளது என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தின் 23

## வைத்தியசாலையில் சிறைக்கைதி ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலை கைதி ஒருவர் வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை மரணமடைந்துள்ளார். 23

## நாட்டை தாரைவார்க்க இடமளிக்கப்பட மாட்டாது

### அமைச்சர் கயந்த கருணாதிலக்க



(கொழும்பு)

யார் என்ன சொன்னாலும் தாம் இந்த நாட்டின் மீது பற்றுள்ளவர்கள் எனவும், இந்த நாட்டின் நிலத்தில் ஓர் அங்குலத்தைக் கூட எவருக்கும் விட்டுக் கொடுக்க 23

## அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்புடன்

## ‘ஒருமித்த நாடு’ என்ற கொள்கையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்படும்

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்புடனும் "ஒருமித்த நாடு" என்ற கொள்கையின் அடிப்படையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும்என அரச தொழில் கண்டி மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். 24

## தேர்தலை எதிர்கொள்ள ஐ.தே.க அஞ்சுகிறது

### தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அச்சம் கொண்டிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று 23

## சுமந்திரன் பதாகை மீது பெயின்ட் ஊற்றி எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பருத்தித்துறை பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுடைய படங்கள் பொறிக்கப்பட்ட பதாகை மீது வர்ணம் (பெயின்ட்) ஊற்றப் 02

## புதிய அரசியலமைப்பை சகலரும் இணைந்து கொண்டு வாருங்கள்

### மல்வத்து பீட மகாநாயக்கர் கோரிக்கை



(கொழும்பு)

உத்தேச அரசியலமைப்பு தொடர்பிலான சகல நடவடிக்கைகளையும் சகலரும் சேர்ந்து ஒன்றாகவும், சமாதானமாகவும் ஒத்தாசையுடனும் முன்னெடுக்குமாறு மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள 23

## குளிரான காலநிலை வடக்கில் இரு வாரங்கள் நீடிக்கும்

(கொழும்பு)

வடக்கில் குளிரான காலநிலை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்றும், இதன்போது சுவாசம் தொடர்பான நோய்கள், உடலில் அசௌகரியங் 23

## கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கத் தயார்

## சுமந்திரனின் பகிரங்க அழைப்புக்கு மகிந்த அணியினர் சாதகமான பதில்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இணைந்து பயணிக்கத் தமது தரப்பு தயாராகவே இருக்கிறது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 23

## நீதிமன்ற உத்தரவை மறைத்து புதிய சாரதிப் பத்திரம் பெற்ற அரசசாரதி

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற உத்தரவால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான தகவலை மூடிமறைத்துவிட்டு அது தொலைந்துவிட்டது என போலிஸ் முறைப்பாட்டை வழங்கி பொலிஸ் அறிக்கை பெற்றதுடன் அதன் மூலம் புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்ற அரச சாரதி ஒருவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏழரைச் சனி நடக்கிறது போல், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிலேயே முன்னர் செய்த அதே குற்றச்சாட்டுக்கு பின்னரும் மாட்டிக் 23

## புகையிரதத்துடன் மோதுண்டு யாழில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற கடுகதி புகையிரதத்துடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கும் நாவற்குழி புகையிரத நிலையத்திற்கு இடைப்பட்ட பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவருடைய சடலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சடலம் உருக் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்

## செல்வி கந்தையா இராஜலட்சுமி




எமது சபையில் பல ஆண்டுகள் அரும்பணியாற்றி 2019.01.19 ஆம் திகதி ஓய்வுபெற்று செல்லும் செல்வி கந்தையா இராஜலட்சுமி அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம். மேலும் அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய ஆண்டவர் ஆசிர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

(சி-5200)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி 19.01.2019 (சனிக்கிழமை) அன்று மதியம் 1.00மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையும், 20.01.2019 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் J.P.ஜெயதேவன், பீடாதிபதி, விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தடகள பெண்கள் அணியின் முன்னாள் தலைவியும் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஆசிரியருமாகிய திருமதி T.நித்தியா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வருகைதந்து உதவுமாறும், விளையாட்டு ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகும் விளையாட்டு அவையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றது.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-5198)

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச தின உலகப்பெருமஞ்சத் திருவிழா



காலம் : 21.01.2019 திங்கட்கிழமை
காலை 6.00 மணிக்கு பால்குடப்பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

காலை 10.00 மணிக்கு மாபெரும் பொங்கல் விழா.
இரவு 7.00 மணிக்கு உலக பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதி வலம் வருவார்.
அத்துடன் தமிழ் கலாசார நிகழ்வுகளான கரகம், காவடி, கம்படி, சிலம்படி, தீக்கரகம், தீப்பந்தம், மயிலாட்டம், தப்பு இசை, பறை இசை, உடுக்கு இசை போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

முருகன் அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :- பால்குடம் எடுக்கும் அடியவர்கள் வரும் ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பதாக ஆலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(சி-5194)

விளம்பர அனுசரணை:

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில்,
முத்தட்டுமடம்.

லிங்கம் ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

கணேசன் ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ் வீதி,
[illegible]

## கேள்வி கோரல்

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்கு சொந்தமான பல நாட் படகு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. இப்படகினை குத்தகைக்குப் பெற்று கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து "கேள்வி கோரல்" கோரப்படுகின்றது. எதிர்வரும் 24.01.2019 காலை 11.30 மணிக்கு முன்னதாக கேள்விகோரல் என தலைப்பிட்டு தபாலிலோ அல்லது நேர்முகமாகவோ அனுப்பி வைக்கும்படி கோரப்படுகின்றது.

தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்.
இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 9797

(சி-5197)

## வேலை ஆள் தேவை

### தங்கம்மா முதியோர் இல்லம்
**இல.1, புதுக்குளம் வீதி, புதுக்குளம் கனகராயன்குளம்.**

நன்கு தோட்ட வேலை தெரிந்த, முதியோர் இல்லத்தை பராமரிக்கக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட ஆண் தேவைப்படுகின்றார்.
நேர்மையாகவும், நன்னடத்தை உள்ளவராகவும், நல்ல உடல் நலம் மிக்கவராகவும், முதியோர் இல்லத்தில் நிரந்தரமாக தங்கி நின்று வேலை செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
(உணவு, தங்குமிடம் இலவசம்)

முதியோர் இல்லத்தில் தங்கி வாழ விரும்பும் 55 வயதுக்கு மேற்பட்ட வாழ்வாதாரம் அற்ற ஆண், பெண் இருபாலாரும் நிரந்தரமாக தங்கி வாழ இடவசதி உண்டு. (சகலவசதிகளும் இலவசமாக செய்து தரப்படும்.)

தொடர்பு: குணசிங்கம்
076 248 2766

இ

## சும...

பட்டு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பகுதியில் எம்.பி சுமந்திரனுக்கு கடந்த புதன்கிழமை வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. அன்றைய தினத்தில் பருத்தித்துறை நீதிமன்ற வீதி மற்றும் ஆலய புனரமைப்பு செய்யப்பட்டமை தொடர்பான "கம்பெரிலிய அபிவிருத்தி யுத்தம்" என்னும் திட்டத்தின் பதாகை திரைநீக்கம் செய்யப்பட்டது. அதில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுமந்திரன் எம்.பியினுடைய புகைப்படங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் நேற்று குறித்த பதாகைகள் மீது வர்ணங்கள் ஊற்றப்பட்டு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த பதாகையில் உள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமருடைய புகைப்படங்கள் மீது எந்த விதமான வர்ணங்களும் பூசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9-60)

## 1-ம் வருட நினைவலைகள்

மண்ணில் 21 . 11 . 1949



விண்ணில் 29 . 01 . 2018

### அமரர் கமலேஸ்வரி செல்வவிநாயகம்

திதி – பூர்வபட்ஷ திரயோதசி

பண்புடன் வாழ்ந்த அம்மா
விண்ணிற்கு ஏகிய தேனோ
பண்ணிய காரியம் யாவும்
புண்ணியம் சேர்த்தாய் நீயும்
கண்ணியம் உந்தன் கொள்கை
கடமையில் தவறேதும் இல்லை
இலட்சிய வாழ்வு வாழ்ந்தாய்
இறைஞ்சிய அம்மனடி சேர்ந்தாய்

உன் நினைவுடன்
வாழ்கிறோம் மண்ணில்
எம் விழிகளில் என்றும்
கண்ணீர்
அம்மன் அடியினை
வேண்டுகிறோம்
அம்மா சாந்தி அடைக
உன் ஆன்மா

1-ம் கட்டை,
பருத்தித்துறை.

ஈஸ்வரி நகை அகம்
ஆ.செல்வவிநாயகம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசை எதிர்ப்பதோடு

# அனைத்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் நாம் தொடர்ந்து அவதானம் செலுத்துவோம்

### சம்பந்தனை சாடியபடி எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்ற மகிந்த

(கொழும்பு)

இதுவரை காலமும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பிரதேச பிரச்சினைகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இன்று(நேற்று) முதல் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மலையகம் என நாட்டின் சகல பகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் நாம் அவதானம் செலுத்தவுள்ளோம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிக்காத அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.





எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ நேற்று (வெள்ளிக்கிழமை) தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார்.

அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

'நான்கு வருடங்களின் பின்னர் இன்று(நேற்று) நாம் எதிர்க்கட்சியாக நாட்டு மக்களுக்கு சேவை வழங்கவுள்ளோம். இதுவரை காலமும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பிரதேச பிரச்சினைகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இன்று முதல் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என நாட்டின் சகல பகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தவுள்ளோம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளின் குறைகளைச் சுட்டிக்காட்டி, மக்களுக்கு நியாயம் கிடைக்க எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் அர்ப்பணிப்புடன் செயற்படும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் நாம் அதிக கரிசனையுடன் செயற்படுவோம்.

இந்தக் குறுகிய காலத்திற்குள் நாட்டின் ஜனநாயகம் இல்லாமல் போகின்றது. மக்கள் பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். விவசாயிகளும் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கவில்லை. எனவே நாம் அரசாங்கத்திற்கு எதிராக செய்யக்கூடிய சகல செயற்பாடுகளையும் செய்யத் தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (இ-4)

## மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக தொடர்ந்து செயற்படமாட்டார்

### கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் செயற்படமாட்டார். விரைவில் ஆட்சியதிகாரமிக்க பதவியில் மக்களால் அமர்த்தப்படுவார் என்று பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் விரைவாக நடத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்க்கட்சி பதவியிலிருந்து முன்னெடுத்து செல்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இலங்கை-அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் மிகப் பயங்கரமானது

### சுதந்திரக்கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்து கொள்ளவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை இலங்கையை யுத்த பூமியாக மாற்றிவிடும். இந்தியா - சிங்கப்பூர் உடன்படிக்கையை விடவும் அமெரிக்க பாதுகாப்பு உடன்படிக்கை மிகப் பயங்கரமானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எச்சரித்துள்ளார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி நாட்டை நாசமாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இந்த பாதுகாப்பு உடன்படிக்கை மூலமாக ஐக்கிய அமெரிக்காவின் இராணுவ வீரர், இராணுவத் தளபாட, ரேடியோ கதிரலை பரிமாற்றல், தொடர்பாடல் பரிமாற்ற உடன்படிக்கை என்ற பெயரில் இந்த உடன்படிக்கை செய்துகொள்ள இரு நாட்டு அரசாங்கமும் தீர்மானித்துள்ளன.

இந்த உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் கடந்த 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை குறித்த முழுமையான தகவல்களை நான் பெற்றுக் கொண்டுள்ளேன்.

குறிப்பாக இந்த உடன்படிக்கையானது அமெரிக்கத் தூதரகப் பணியாளர்கள் கொண்டுள்ள பரந்த அறிவினை இலங்கைத் தூதரகமும்பெற்றுக்கொள்ளும்நோக்கத்திலும் இரு நாட்டுப் பாதுகாப்புப் படைகள் இணைந்து செயற்படும் நோக்கத்திலும் செய்து கொள்ளவுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளதாக தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-4)

## சமஷ்டியும் இல்லை மாகாண இணைப்பும் இல்லை

# புதிய அரசியலமைப்பு யோசனைகள் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தல்

(கண்டி)

அரசியல் அமைப்பு பேரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து கண்டி மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மகாநாயக்கர்களை நேற்று கண்டியில் சந்தித்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த விளக்கத்தை கொடுத்தார்.

உத்தேச புதிய அரசியல் அமைப்பில் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்போ அல்லது சமஷ்டி நிர்வாக முறையோ தொடர்பில் எது வித விடயங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கையின் சரித்திரத்தில் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் புதிய அரசியல் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அந்த சந்தர்ப்பங்களில் தமிழ் அரசியல் கட்சிகள், அரசியலமைப்பு உருவாக்கத்தில் பங்கேற்கவில்லை.

தற்போது நாட்டின் சரித்திரத்தில் முதற் தடவையாக அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் அரசியல் கட்சிகளின் பங்களிப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நேற்று காலை மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா



நாயக்க தேரர்களைச் சந்தித்து, ஆசீர்வாதங்களை பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுடா அந்த சூரிய மேளம்... அடிடா நல்ல வாலிப தாளம் எழுந்துவிட்டது இந்தியா இமயம் போல...

## ஒருநாள் தொடரையும் கைப்பற்றி முத்திரை பதித்தது


வெற்றிக்கிண்ணத்துடன் இந்திய வீரர்கள்


விராட் ஹோலி

அவுஸ்திரேலிய மண்ணில் இம் முறை இந்திய அணி தொட்ட தெல்லாம் பொன்னானது. மூன்று வித கிரிக்கெட்டிலும் முத்திரை பதித்தது. நேற்றைய மூன்றாவது ஒருநாள் போட்டியில் சகால், தோனி அசத்த, 7 விக்கெட் வித்தியா சத்தில் வென்றது. இதன்மூலம் அவுஸ் திரேலியாவில் முதல் முறையாக ஒரு நாள் தொடரை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது.

அவுஸ்திரேலியா சென்ற இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொட ரில் பங்கேற்றது. முதல் இரு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற தொடர் 1-1 என சமனில் இருந்தது. மூன்றா வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று மெல்போர்னில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி 'பந்துவீச்சை' தேர்வு செய்தார். அம்பதி ராயுடு, குல்தீப் யாதவ், கலீல் அகமட் நீக்கப்பட்டு கேதர் ஜாதவ், சகால் சேர்க்கப்பட்டனர். தமிழகத்தின் விஜய் ஷங்கர் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

**சகால் கலக்கல்**

அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் பின்ச், அலெக்ஸ் கரி ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. 'வேகத்தில்' மிரட்டிய புவனேஷ்வர், முதலில் அலெக்ஸ் கேரியை (5) வெளியேற்றினார். தொடர்ந்து அசத்திய இவர், இத்தொடரில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பின்ச்சை (14) ஆட்ட மிழக்கச் செய்தார். 'சுழலில்' கலக்கிய சகால் தனது முதல் ஓவரில், ஷோன் மார்ஷ் (39), கவாஜாவையும் (34) தொடர்ந்து ஸ்டாய்னி சையும் (10) வெளியேற்றினார். மக்ஸ்வெல் (26) ஏமாற்றினார். மீண்டும் மிரட்டிய சகால், இம்முறை ஹேண்ட்ஸ்கோம்ப் (58), ஜாம்பாவை (8) திருப்பி அனுப்பினார்.

48.4 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 230 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது.

பந்துவீச்சில் இந்தியாவின் சகால் 42 ஓட் டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**ஹோலி ஏமாற்றம்**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா (9), ஷிகர் தவான் (23) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. ஹோலி, 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பின் பொறுப்பாக ஆடிய தோனி ஒருநாள் அரங்கில் 70வது அரைச் சதம் எட்டினார். அவுஸ்திரேலியாவில் இவர் அடித்த 8ஆவது அரைச்சதம் இது. ஒன்றி ரண்டு ஓட்டங்களாக சேர்த்த கேதர் ஜாதவ், ஸ்ரொய்னிஸ் பந்தில் பவுண்டரி அடித்து தனது 4ஆவது அரைசதம் எட்டினார். இருவ ரும் 4வது விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் சேர்த்து வெற்றியை உறுதி செய்தனர்.

இந்தியா 49.2 ஓவர்களில் 3 விக்கெட் டுக்களை இழந்து 234 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக் கில் கைப்பற்றியது. தோனி (87), கேதர் ஜாதவ் (61) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகன் விருதை இந்தியாவின் சகால் வென்றார்.

**முதல் அணி**

மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரை 1-1 என 'சமன்' செய்த இந்தியா, பின் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என வென்றது. தொடர்ந்து அசத்திய இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2-1 என கைப்பற்றியது. இதன்மூலம், அவுஸ்திரேலிய மண்ணில் ஒரு தொடரை கூட இழக்காமல் தாயகம் திரும்பிய முதல் அணி என்ற சாதனை படைத்தது.

**மூத்த வீரர்**

அவுஸ்திரேலிய மண்ணில் ஒருநாள் தொடரின் 'நாயகன்' ஆனார் தோனி (193 ஓட்., 2 'ஸ்டம்பிங்', 1 'பிடி'). அதிக வயதில் இவ்விருது வென்ற இந்திய வீரர்களில் கவாஸ்கரை (37 வயது, 191 நாள், 1987, எதிர் இலங்கை) முந்தினார் தோனி (37 வயது, 195 நாள்).

**சபாஷ் 'தல'**

நேற்று பின்ச், 'கிரீசை' விட்டு அதிக தூரம் வெளியில் வந்து வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டார். இதைப் பார்த்த தோனி, புவனேஷ்வரிடம் வந்து ஆலோசனை கொடுத்தார். அடுத்த பந்தில் பின்ச், எல்.பி.டபிள்யு ஆனார்.

**ஆஸியை துரத்தும் துரதிர்ஷ்டம்**

இந்தியாவுக்கு எதிராக ஏமாற்றிய அவுஸ் திரேலிய அணி, தொடர்ச்சியாக 6ஆவது ஒரு நாள் தொடரை இழந்து வேதனைக்குள்ளானது.

இந்தியாவுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்திரேலிய அணி 1-2 என்ற கணக்கில் இந்தியாவிடம் பறி கொடுத்தது. இதன்மூலம் இரு அணிகள் பங் கேற் கும் ஒருநாள் தொடரை (பைலேட்ரல்சீரிஸ்) தொடர்ந்து 6ஆவது முறையாக கோட்டைவிட்டது.

கடந்த 2017ல் நியூசிலாந்தில் நடந்த 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்திரேலிய அணி 0-2 என இழந்தது. அதன்பின் இந்தியா (0-4, 2017, இடம்: இந்தியா), இங்கிலாந்து (1-4, 2018, இடம்: அவுஸ்திரேலியா), இங்கிலாந்து (0-5, 2018, இடம்: இங்கிலாந்து), தென்னாபிரிக்கா (1-2, 2018, இடம்: அவுஸ்திரேலியா) அணிகளுக்கு எதிராக ஒருநாள் தொடரை பறிகொடுத்தது.

◈ இந்த 6 தொடர்களில் ஆரோன் பின்ச் 3 முறை (எதிர் நியூசிலாந்து, தெ.ஆ, இந்தியா) தலைவராக இருந்துள்ளார். இரண்டு முறை ஸ்ரீவ் ஸ்மித் (எதிர் இந்தியா, இங்கிலாந்து), ஒரு முறை ரிம் பெய்ன் (எதிர் இங்கிலாந்து) அணியை வழிநடத்தினர்.

**3** அவுஸ்திரேலிய தொடரில் முதல் இரு போட்டிகளில் 51, 55 ஓட்டங்கள் எடுத்த தோனி, நேற்றும் அரைசதம் (87) எட்டினார். இதற்கு முன் இங்கிலாந்து (2011ல் 69, 78, 50 ஓட்.,), நியூசிலாந்து (2014ல் 56, 50, 79) மண்ணில் இதுபோல தொடர்ந்து மூன்று முறை அரைச்சதம் எட்டினார்.

**6** கடந்த 2017, ஜன., முதல் அவுஸ்திரேலிய அணி பங்கேற்ற இரு அணிகள் மோதிய 6 ஒருநாள் தொடர்களிலும் தோற்றது. பின்ச் (3), ஸ்ரீவ் ஸ்மித் (2), ரிம் பெய்ன் (1) தலைமையில் இந்த தோல்வி கிடைத்தது.

**8** இத்தொடரில்அதிகவிக்கெட்டுகள் வீழ்த்திய பந்துவீச்சாளர்களில் இந்தி யாவின் புவனேஷ்வர் குமார் (8 விக்.,) முதலிடம் பிடித்தார். தலா 6 விக்கெட் சாய்த்த சகால் (இந்தியா), ரிச்சர்ட்சன் (6) அடுத்த இரு இடம் பெற்றனர்.

**103.07** 'சேஸ்செய்தபோட்டி களில் குறைந்த பட் சம் 1000 ஓட்டங் களுக்கும் மேல் எடுத்தவர்களில் அதிக சராசரி வைத்துள்ளவர்களில் தோனி (73 இன்னிங்ஸ், 2783 ஓட்., சராசரி 103.07) முதல்வனாக உள்ளார். ஹோலி (78ல் 4899, சராசரி 97.98), மைக்கல் பெவன் (ஆஸி., 45ல் 1725, சராசரி 86.25) அடுத்து உள்ளனர்.

**193** இத்தொடரில் அதிக ஓட்டங் கள் எடுத்தவர்களில் இந்தி யாவின் தோனி (193) இரண்டாவது இடம் பிடித்தார். முதலிடத்தில் ஷோன் மார்ஷ் (224) உள்ளார். அடுத்த 2 இடத்தில் ரோகித் (185), ஹோலி (153) உள்ளனர்.

**226** இந்திய ஒருநாள் அணியில் 226 வது வீரராக நேற்று அறிமுகம் ஆனார் தமிழகத் தின் 'சகலதுறை வீரர்' விஜய் ஷங் கர். இதற்கு முன் 'ரி20'இல் இலங்கை அணிக்கு எதிராக 2018, மார்ச் 6ல் அறிமுகம் ஆனார்.

**1000** அவுஸ்திரேலிய மண்ணில் அந்த அணி க்கு எதிராக ஒருநாள் அரங்கில் 1000 ஓட்டங்கள் எடுத்த நான் காவது இந்தியர் ஆனார் தோனி. இவர் 35 போட்டிகளில் 1052 ஓட்டங்கள் (35ல்) எடுத்துள்ளார். முதல் மூன்று இடங்களில் சச்சின் (47ல் 1,491 ஓட்.,), ரோகித் (30ல் 1,328), ஹோலி [illegible]


## நல்லூர் பிரதேச சபை
## வீதவரிக்கான (சோலைவரி)
# பகிரங்க அறிவித்தல்

1987ம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் அதிகாரத்திற்கு அமைய நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள நல்லூர் உப அலுவலக எல்லைக்குள் அமைந் துள்ள வீடுகள், கட்டடங்கள், காணிகள், சிறுமனைகள், வெற்று ஆதனங்கள் ஆகிய வற்றின் 2019ஆம் ஆண்டின் புதிய ஆதன மதிப்பீட்டின் ஆண்டுப் பெறுமதியின் ஏற் கனவே தீர்மானித்த 10% வரியை, வரியிறுப்பாளர்கள் நன்மை கருதி ஆண்டு பெறுமதியின் 4% வரியாக அறவிட சபை தீர்மானித்துள்ளது என்பதை நல்லூர் உப அலுவலக எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளருக்கு இத்தால் அறியத்தருகின்றேன். உரிய காலப்பகுதியில் வீத வரிகளைச் செலுத்தி உரிய கழிவினைப் பெற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்வதுடன் பொதுமக்களின் நன்மை கருதி இம்மாதம் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் உப அலுவலகத்தில் உரிய வரியைச் செலுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

தா.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.
19.01.2019.

(C-5199)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு எதிரான தடைச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்லமை, சமூக மாற்றத்திற்கான இயக்கம், பல்வேறுபட்ட அநீதிகளுக்கு எதிராக தனது பயணத்தை முன்னெடுத்து வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டமானது தற்போது பயங்கரவாதத்திற்கு எதிரான தடைச்சட்டமாக அமுலுக்கு வருவதற்கான தீவிர முயற்சியில் நல்லாட்சி அரசாங்கம் இறங்கியுள்ளது.

புதிதாக அமுலுக்கு வர இருக் கும் இச்சட்டமானது பல எதிர்மறையான விளைவுகளை குறிப்பாக தமிழ் சமூகத்தினருக்கு கொண்டுவரும் என்பதனை அறிந்தமையாலும், அரசியல் கட்சிகள் அதனை கேள்விக்குட்படுத்தாது இருப்பதனாலும், நீதித்துறை இச் சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தளளுபடி செய்தாலும், போராட்டம் ஒன்றை நாளை 20 ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) யாழ். பேருந்து நிலையம் முன்பாக பிற்ப கல் 3 மணியளவில் முன்னெடுக்கவுள்ளோம்.

இச்சட்டமானது மாற்றப்படுவதற்கான சாத்தியம் இருக்குமா என்று அறியாத போதும், அதில் சில மாற்றங்களையேனும் ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

காலம் தாமதித்தால் சிறுபான்மையினருக்கு எதுவும் நடக்கலாம் என்ற நிலையில் உள்ளோம். தங்கள் பங்களிப்பு நம் தேசத்தினை காக்க உதவும்.

எனவே, அனைவரையும் திரண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறோம். ஊர்வலத்துடன், எமது பயணத்தை தொடர்வோம் என அந்த அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில்

# தவறான முடிவை எடுத்தால் மகிந்தவை ஆதரிக்க மாட்டோம்

## சனத் நிஷாந்த எம்.பி.வெளிப்படை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவு செய்யும் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இருந்தாலும் அவர் தவறான முடிவை எடுத்தால், தாம் அதனை ஆதரிக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தவறான முடிவை எடுக்க மாட்டார் என நம்புவதாகவும் அவர் தவறான முடிவை எடுத்தால், நாங்கள் அதனை ஆதரிக்க போவதில்லை என்பதை தெளிவாகக் கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சனத் நிஷாந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறுத்தப்படுவதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பெரும்பாலானோர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையே ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமஷ்டியை கோருவோர் தெற்கில் வாழக்கூடாது

## சரத் வீரசேகர கருத்து குருபரன் கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

சமஷ்டியை கோரு வோர் தெற்கில்வாழக்கூடாது எனும் சரத் வீரசேகரவின் கருத்தை வன்மையாக கண்டிக்கின்றேன். இது அரசியல் மூடத்தனத்தின் பிரதிபலிப்பு, மடமைத்தனமானது என தமிழ்த்தேசிய பணிக் குழுவின் தலைவர் முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

சரத் வீரசேகர சார்ந்த அமைப்பிற்கு தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பு என்று வேறு பெயர். கண்டிய சிங்களவர்தான் இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த முன்னோடிகள் என்பதை அறியாத அரசியல் கற்றுக்குட்டியா சரத் வீரசேகர. சமஷ்டியை கோருவோர் தெற்கில் வாழக் கூடாது எனும் சரத் வீரசேகரவின் கூற்று மடமைத்தனமானது. அப்படியானால் கண்டிய சிங்களவர் சமஷ்டியை கோரிய போது கண்டிய சிங்களவர் மேல் மாகாணத்திலோ தென் மாகாணத்திலோ வாழக் கூடாது என்பதா அர்த்தம். கனடாவில் பிரெஞ்சு பேசும் கியூபெக்மாநிலத்தவர்ஏனைய பிரதேசங்களில் வாழவில்லையா. இவற்றை சரத் வீரசேகர ஏன் அறிந் திருக்கவில்லை. கன்னட மாநிலத்தார், கர்நாடக மாநிலத்தார் மலையாள மாநிலத்தார் தமிழகத்தில் வாழ்வதை சரத் வீரசேகர ஏன் அறிந்திருக்கவில்லை. தமிழர்கள் பெங்களூரில் வாழ்கின்றார்கள் இவையும் ஒருவித (Quasi Federal States) சமஷ்டி மாநிலங்கள் என்பதை அறியாத அற்ப அரசியல் கருத்தே தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பின் சரத் வீரசேகரவின் கூற்று.

இவற்றுக்கு மேலாக பண்டாரநாயக்க சமஷ்டியை அறிமுகப்படுத்த விளைந்த போது நாட்டை பிரித்து ஒன்பது நாடாக்கவா முயன்றார்? உலகில் சமஷ்டியுள்ள நாடுகள் எல்லாம் இன்று பிரிந்து பல்வேறு நாடு களாகி விட்டனவா ?

தமிழ்த் தலைமைகளின் எண்ணத்தை புரிந்து கொள்ளுங்கள், சமஷ்டி ஒரு எட்டாக்கனி என்பதை அறிந்துதான் வடக்கு-கிழக்கு இணைப்பு என்னும் வரலாற்றின் இந்த கடந்த கால நிஜத்தை கோரி ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான தீர்வு என்பதை வலியுறுத்துகின்றனர். இனவாத சிந்தனையோடு தான் சமஷ்டியை கோருவோர்தெற்கில் வாழக் கூடாது எனும் கருத்தை சரத் வீரசேகர வலிந்து இழுத்து பேசியிருக்கின்றார் எனவும் குமர குருபரன் தெரிவித்துள்ளார். (இ)

# மரண அறிவித்தல்

## பொன்னையா திருநாவுக்கரசு-அரசு விதானையார்

### (ஓய்வுநிலை கிராம சேவையாளர்)



முல்/தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும் முல்/முள்ளியவளை 4ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருநாவுக்கரசு 17.01.2019 அன்று காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான பொன்னையா வேலாசியின் அன்பு மகனும், அமரர். சண்முகம் கனகம்மாவின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மீனாட்சியம்மா (இராசம்மா), செல்வநாயகம் (விதானையார்), விசாலாட்சியம்மா, விஸ்வலிங்கம், இரத்தினம், நடராசபிள்ளை (மாணிக்கவாசகர்) மற்றும் தியாகராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வத்சலா (ஆசிரியை முல்/வற்றாப்பளை மகாவித்தியாலயம்), தனஞ்ஜெயன் (லண்டன்), ஜனகன் (லண்டன்), நிரஞ்சலா (நிர்வாக உத்தியோகத்தர் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் வடமாகாணம்), ஜெயசலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகேந்திரன் (அதிபர் முல்/தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை), சௌந்தரராஜன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வித் திணைக்களம் கிழக்கு மாகாணம்), செந்தாமரைச்செல்வி (லண்டன்), சுகந்தினி (லண்டன்), பகீரதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நேசரட்ணம் , பொன்மணி, பதஞ்சலி (பொன்னம்மா), சிவானந்தம் (ஓவசியர்)மற்றும் சின்னம்மா, வள்ளியம்மை (கனடா), சந்திரலீலா (லண்டன்), செல்வானந்தம், பாலசுப்பிரமணியம், அற்புதராஜா, விவேகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியை 20.01.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நாவற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

4ம் வட்டாரம்
முள்ளியவளை, முல்லைத்தீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

(4815)

# இராசி பலன்

19.01.2019

தை 05, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 3.53 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 8.49 மணிவரை

சுபநேரம் 3.35-5.05 மணிவரை

இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

கிரகநிலை
சந்திராஷ்டமம்
மூலம்

செவ் | சந் | ராகு | சூரி,புத, கேது | சனி | குரு,சுக்

**மேடம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களைச் சமாளிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தால் மற்றொரு வகையில் விரயங்கள் கூடலாம், தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், போசன நன்மையுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி** தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும்எண்ணம் மேலோங்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**துலாம்** உறவினர் வழியில் மனம் நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், விருப்பங்கள் நிறைவேறலாம்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், மறைமுக போட்டிகள் மாறும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்புக்கள் உயர வழிவகை செய்வீர்கள்.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வியாபார விருத்தியுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# இயலாமையுடைய பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு பரிந்துரைகள் எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமானது கௌரவமான வாழ்க்கைக்கு இயலாமையுடய பெண்களை முன்னிலைப் படுத்தல் (Mainftreaming women with disabilities for dignified life) என்ற தொனிப்பொருளில் 2019 ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானதுஇயலாமையுடையபெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவதானம் செலுத்துவதுடன் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்கவும் எதிர்பார்த்துள்ளது.

இதன் முதல் கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள இயாலாமையுடை பெண்களுக்காக பணியாற்றுகின்ற சிவில் அமைப்புக்களை மற்றும் சிறப்பாக செயற்படும் இயலாடையுடைய பெண்களை இனங்காண்பதுடன் இயலாமையுடைய பெண்கள் தொடர்பான தரவுகளையும் திரட்டுவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் இப்பிரதேசத்திலுள்ள இயலாமையுடைய பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கும் பிராந்திய செயலணியைத் தாபிக்கவுள்ளது.

இக்கலந்துரையாடல்களில் நிறைவாக சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 ஆம் திகதி இயலாமையுடைய பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்கவும் எதிர்பார்த்துள்ளது.

எனவே இக்கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்கு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள இயலாமையுடைய கெண்களுக்காகப் பணியாற்றுகின்ற சிவில் அமைப்புக்களை மற்றும் சிறப்பாச் செயற்படும் இயலாமையுடைய பெண்கள் எதிர்வரும் 23.01.2019 இற்கு முன் தங்கள் விபரங்களை இல.01, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்திற்கு அல்லது hrcjaffna@sltnet.lk என்ற மின்னஞ்சல்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் அறிவித்துள்ளார். (இ

# யாழில் எம்.ஜி.ஆரின் 102வது பிறந்த தினம்





(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய நடிகர் புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102ஆவது பிறந்த தினம் நேற்று வெள்ளிக்கிழமை யாழில் கொண்டாடப்பட்டது.

எம்.ஜி.இராமச்சந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர்.சிலைக்கு முன்பாக 102 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் இடம்பெற்றன.

எம்.ஜி.ஆர். சிலைக்கு சுந்தரலிங்கம் மாலை அணிவித்து தீபம் காட்டி அஞ்சலி செலுத்தி அவரின் பிறந்த தினத்தை நினைவுகூர்ந்தார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சமூகசேவையாளர் மா.கருணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தனது சொந்த நிதியில் யாழ்.எம்.ஜி.ஆர்.கோப்பாய் சுந்தரலிங்கம் வறிய மக்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்தலைமைத்துவக்குடும்பங்களுக்கு ஆடைகள், சிறு தொகைப் பணம் என்பவற்றையும் வழங்கினார்.(இ-9)

## 5 வருடங்கள் வரை காத்திருப்பு

# மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் மானியம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் தமது பயிர்ச் செய்கையின் முழுமையான பயனைப் பெறுவதற்கு 5 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளதால் ஏனைய பயிர்ச்செய்கைக்கு வழங்கும் மானியம் போல் தமக்கும் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமாகாணத்தில் தற்போது 200 பேர் வரை இச் செய்கையில் ஈடுபடுவதாகவும் யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திலும் மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம், தாள்பாடு,முழங்காவில்ஆகிய பிரதேசங்களில் அதிகளவு பயிரிடப்பட்டபோதும் முல்லைத்தீவு மாவட்டமே சுமார் நூறு செய்கையாளர்களைக் கொண்ட மாவட்டமாக உள்ளது.

இச்செய்கையாளர்களுக்குத் தேவையான மரமுந்திரிகைக் கன்றுகளும் மூன்று வருட இலவச ஆலோசனை வகுப்புக்களும் வழங்கப்பட்ட போதும் ஒரு ஏக்கர் மரமுந்திரிகையை ஒரு வருடத்துக்கு பராமரிப்பதற்கு 80 ஆயிரம் ரூபாய் வரை செலவிடுவதாகவும் இதனால்தாம் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதாகவும் தெரிவித்தனர்.

மரமுந்திரிகைக் கன்று ஒன்றை ஆரம்பத்திலிருந்து வளர்த்தெடுப்பதற்கு வருடத்திற்கு இரு தடவை உரங்களை இடவேண்டியுள்ளது. ஆனால் தனியார் கடைகளில் 2500 தொடக்கம் 3 ஆயிரம் ரூபா வரை உரவகைகள் விற்பனை செய்யப் படுகின்றன.

மேலும் மரமுந்திரிகைப் பூவை பூச்சிகள் தாக்குவதால் தாம் சிறந்த அறுவடையைப் பெற முடியாமல் உள்ளதாகவும் இதற்குத் தேவையான மருந்து வகைகளைக் கொள்வனவு செய்யும் போது ஒரு ஏக்கருக்கு இரண்டுதடவைகள் விசுறுவதற்கு 20 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுவதாகத் தெரிவித்தனர்.

எனவே மரமுந்திரிகைச் செய்கைக்குத் தேவையான மருந்துகள், உரவகைகளை கொள்வனவு செய்வதற்காக மானியம் அல்லது வங்கிக் கடன்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-10)

## கோப்பாய் வைத்தியசாலையில் 18 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

### 111 பேர் டெங்கு நோயாளர்கள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடம் 18 ஆயிரம் வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் எனகோப்பாய் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தின் வலிகாமம்கிழக்குப்பகுதியில்வாழும் மக்களின் சுகாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் இவ் வைத்தியசாலையின் 5 நோயாளர்கள் விடுதிகளும் 65 நோயாளர்கள் படுக்கை வசதிகளும் உள்ளன.

இவ் வைத்தியசாலையில் கடந்த வருடம் மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 1550 பேர் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வெளியேறியதாகவும் இதில் 111 டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-10)

## ஒப்பந்தகாரர்கள் வழங்குநர்களை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்படும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் திட்டமானது 30.01.2019 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை பதிவு செய்யாத வர்த்தகர்கள் இச் சந்தர்க்கத்தைப் பயன்படுத்தி மாவட்ட செயலகத்தில் உடனடியாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ






நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பால் நடேசன் வனிதாமணி தம்பதியரின் 50 ஆவது திருமண நாளை முன்னிட்டு யாழ். இந்துக்கல்லூரியில் கணிதப்பிரிவில் (உயர்தரம்) கல்விபயிலும் ம.ஜெயராம் என்ற மாணவனுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.

## ஸ்ரீ ஞான வைரவ ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலைய ஸ்ரீ ஞான வைரவ சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இதில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளது.(இ-5)

## அனந்த ரமணனின் அனுபவப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 64 ஆவது நிகழ்வாக "மாற்றுக் கோணங்கள்" எனும் தலைப்பில் அனந்த ரமணன் கவனிக்கப்படாத, பேசப்படாத சமூக உண்மைகளை மௌனசாட்சியத்தினூடும் தெளிவான கவனக்குவிப்பினூடும் ஒரு குறும் திரைப்படக் கலைஞனாக எவ்வாறு கையாளுதல் என்பது பற்றிக் கலந்துரையாடவுள்ளார். 2009 இல் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கணங்களே தன்னைக் குறும்படங்களை நோக்கித் தள்ளியதாகக் குறிப்பிடும் அனந்த ரமணனின் அனுபவம் மற்றும் காட்சிப் பகிர்வாக இது அமைகிறது.

இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகம், 199, கோவில் வீதி, நல்லூரில் இடம்-பெறும்.

இந்நிகழ்வில் கலை, சினிமா ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன்பெறுமாறு ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் விமலா வேல்தாஸ் அறிவித்துள்ளார். (இ-7)

## திருக்கோவில் அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

சரவணை கிழக்கு மயிலப்புலம் திருப்பொலி கட்டுவன்வான் ஐயனார் திருக்கோவில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை மறுதினம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தைப்பூச தினத்தில் காலை 9.35 மணி முதல் 9.50 மணி வரை இடம்பெறும்.

இந்நிகழ்வில் பரிகாரத் தெய்வங்களாகிய விநாயகர், முருகன் ஆலயங்களுக்கும் மற்றும் யாகசாலைக்கும் அடிக்கல் நாட்டப்படும். (இ-5)

## காரைநகர் பிரதேசத்திற்கான நீர் விநியோகம் தொடர்பாக பிரதேச செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்திற்கான நீர் விநியோகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் காரைநகர் பிரதேசத்திற்கான நீர் விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கு நீர் விநியோக அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டது.

இக் கலந்துரையாடலில் பழைய முறையில் நீரை விநியோகிப்பது தொடர்பாக நீர் விநியோக அமைப்புக்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்ததாகப்பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

எனினும்தான் இது தொடர்பில் இறுதிமுடிவு எடுக்கவில்லையெனவும்பிரதேச சபையின் விருப்பத்தை அறிவதற்காக குறித்த விடயத்தை அனுப்பவுள்ளதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதித் தவிசாளர், தவிசாளர் தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்துரையாடலுக்கு வரவில்லையெனவும் இதனால்தான் கலந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாலில் பிரதேச சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்குத் தெளிவுபடுத்தியதாகவும் பிரதேச செயலகக் கூட்டம் தொடர்பில் பிரதேச சபையினருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு தமிழ்ஐயா கல்விக் கழகமும் தமிழ் ஆடற்கலை மன்றமும் இணைந்து நடத்தும் இருநாள் சிலப்பதிகார முத்தமிழ் விழா நேற்று நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் ஆரம்பமானது.

# ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டவர்களிடம் பங்களாதேஷ் அதிகாரிகள் தீவிர விசாரணை

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் அதிக நிறைகொண்ட ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான இரண்டு பங்களாதேஷ் நாட்டவர்களும் பங்களாதேஷின் போதைப் பொருள் தடுப்புத் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



பங்களாதேஷ் போதைப் பொருள் தடுப்புப் திணைக்களத்தைச் சேர்ந்த 6 உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கையில் போதைப் பொருள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு உதவும்வகையில் அவர்கள் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் கைதான பங்களாதேஷ் நாட்டவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பங்களாதேஷிலும் இலங்கையிலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தரவுகள் பங்களா தேஷ் போதைப் பொருள் தடுப்புப் திணைக்களத்தினரால் இலங்கை பொலிஸாருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த குழுவினர் பொலிஸ்மா அதிபரை சந்திக்கவுள்ளதாகவும், நாளை மறுதினம் 21 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ளதாகவும் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி தெஹிவளை பிரதேசத்தில் வைத்து 3 ஆயிரத்து 336 மில்லியன் பெறுமதியான 278 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்த போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபராக கருதப்படும் பெண்ணொருவரை கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையில் விபத்து இத்தாலி பிரஜை பலி!

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான கல்கிஸை பகுதியில் ஏற்பட்ட புகையிரத விபத்தில் வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளுத்கமவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் மோதுண்டு இத்தாலி நாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்டதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிஸை சேரம் பிரதேசத்தில் அமைந்துள்ள ரன்வெலி ஹோட்டலுக்கு அருகிலுள்ள வீதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படு காயமடைந்த இத்தாலி பிரஜை களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

# மருத்துவ மன்ற பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மருத்துவ மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் தலைவர் வைத்திய கலாநிதி ப.அச்சுதன் தலைமையில் நடைபெறும். இதில் 2019 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும் எனவும், அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அதன் செயலாளர் வைத்திய கலாநிதி ந. இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-5-104)


**முன்பள்ளி ஆசிரியை தேவை**

முன் அனுபவமுள்ள க.பொ.த. உயர்தர கல்வித் தகுதியுடன் நடனம், பாட்டு, நடிப்பு, சித்திர ஆற்றலைப் பிள்ளைகளுக்கு பயிற்றுவிக்கும் திறனுள்ள முன்பள்ளி ஆசிரியை தேவை.

தொடர்புகளுக்கு:- (7189)
தலைவர், மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு.

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 4செவ் 2ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, சொந்தவியாபாரம்<br>எதிர்பார்ப்பு:A/L<br>தொ.இ: B/9122 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 3<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/9154 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 4செவ் 1ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BACC, MACC Audit Senior, USA<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: B/9123 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 2 செவ் 7ல்உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/9156 |
| பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்:உத்தராடம் 3செவ் 4ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, Police<br>தொ.இ: B/9124 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: O/L உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/9157 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 4செவ் 2 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில: A/L களஞ்சியபொறுப்பாளர<br>தொ.இ: B/9125 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 3செவ் 4இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: O/L, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/9158 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

**வேலை ஆட்கள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு நிரந்தர பொருள் காட்சிப்படுத்துனர்கள் (Merchandiser) (ஆண்) தேவை. வயதெல்லை - 18-30 சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் சமுகம் தரவும். (7183)

தேனு களஞ்சியம்
(நெஸ்லே விநியோகஸ்தர்)
இல-54/2, பலாலி வீதி, கோண்டாவில்.
T.P. No-021 492 1258, 075 642 0131

ஓம்
சிவமயம்

**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபியில்**
**அடியார்களுக்கு**
**சிறப்பு அன்னதானம்**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் 21.01.2019 திங்கட்கிழமை தைப்பூச விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலா வந்து அன்பர்களுக்கு அருள்பாலிப்பாள்.

நயினையில் தைப்பூச விழா



அன்றைய தினம் நயினாதீவுக்கு வரும் மெய்யடியார்கள் அனைவருக்கும் பிரதான சாலையில் அமைந்துள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் வழமைபோல் சிறப்பு அன்னதானம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

நயினாதீவு-02 (7151) நிர்வாகம் அமுதசுரபி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கத்திலிருந்த நில உரிமை முறைமைகளும் மண்ணின் மகிமை (பிம்சவிய) நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காணி உரித்துப் பதிவும்



07

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பொறுப்புகள்

காணி சம்பந்தமாக விசாரணை செய்து உரிமைகளை தீர்த்து வைத்தல், காணி உரித்தை தீர்மானித்தல் மற்றும் நிலஅளவை மற்றும் காணிப் பதிவுத் திணைக்களங்கள் மேலும் காணி சீர்திருத்த ஆணைக்குழு, மகாவலி அதிகார சபை, காணி ஆணையாளர் திணைக்களம் போன்ற தொடர்புடைய ஏனைய காணி நிறுவனங்களுடன் ஒன்றிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பனவாகும். இந்தப் பொறுப்புகள் பின்வரும் பணிகளுடன் தொடர்புடையன.

- உரித்து வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் கிராமங்களின் வரிசையைத் தெரிவு செய்தல்
- மாவட்ட மற்றும் கிராம மட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி சீர் செய்தல்
- வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கடத்திரள் அளவை செய்யப்படும் பகுதியை விளம்பரப்படுத்தலும், உடைமை/ உரித்து நுண்ணாய்வும்.
- காணிப் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நெறிப்படுத்தல்
- செயற்பாட்டு நடைமுறையின் ஒட்டுமொத்த கண்காணிப்பும், முன்னேற்ற மேற்பார்வையும்

நிலஅளவைத் திணைக்களத்தின் பொறுப் புகள்

நிலஅளவைத் திணைக்களம் கடத்திரள் அளவைகளை மேற்கொள்வதற்கும், கடத்திரள் படங்களையும், கிடைப்படங்களையும் தயாரிப்பதற்கும் பொறுப்பாக உள்ளது.

இந்தச் செயற்பாடு பின்வரும் பணிகள் வாயிலாக அடையப் பெறுகின்றன.

- புவிப்பாத்த வலையமைப்பை ஏற்படுத்துதல்
- எல்லை குறித்தலின் பின் கடத்திரள் அளவை
- கடத்திரள் அளவையிலும், படமாக்கலிலும் முழுமையான செம்மைத் தன்மையையும் , தரத்தையும் பேணுதல்.
- கடத்திரள் படங்களையும், கிடைப்படங்களையும் தயாரித்தல்.
- தரவுகளை கையாள்வதும், முகாமைத்துவமும்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பொறுப்புக்கள்

பதிவாளர் நாயகம் திணைக்களம், காணி உரித்து பதிவு மற்றும் காணி உறுதிப்பத்திரங்களை பதிவு செய்தல் என்பவற்றுக்கு பொறுப்பாக உள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாக ஒழுங்கு முறையாக பதிவுகளை பேணுதல், பதிவு செய்யப்பட்ட காணித் துண்டுகளுக்கு உரித்து சான்றிதழ் வழங்குதல், ஒரு உரித்து சான்றிதழுடன் தொடர்புடையதாக தொடர்ந்தவரும் கொடுக்கல்- வாங்கல் செயற்பாடுகளை பதிவு செய்தல் என்பனவாகும்.

காணி நிர்ணய திணைக்களத்தின் அமைவிட அலுவலகம் - (site office)

இவ் அலுவலகம் காணி உரித்து வழங்கும் கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் கீழ்வரும் ஒரு அமைவிட அலுவலகமாகும் (site office).

இந்த அலுவலகம் பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது.

- கிராம மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- காணிகள் தொடர்பான தகவல்களை ஆராய்ந்து திரட்டுதல்.
- அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கடத்திரள் அளவைப் பிரதேசங்களை விளம்பரப்படுத்தி பதிவுக்கான உரிமைக் கோரிக்கைகளை கோருதல்.
- உள்ளூர் மட்டத்தில் காணி உடைமை தொடர்பில் ஒப்பாய்வு செய்தல்.
- காணிப் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்தல்

பிரதேச நில அளவை அலுவலகம்

இவ் அலுவலகம் நில அளவைத் திணைக்களத்தின் கீழ் வரும் ஒரு அமைவிட அலுவலகமாகும் (site office). கடத்திரள் அளவைகளை மேற்கொள்ளுதல், கடத்திரள் படங்களை தயாரித்தல் இந்த அலுவலகத்தின் பொறுப்புகளாக உள்ளன. இதன் பிரதான பணிகள் பின்வருமாறு.

- உள்ளூர் மட்டத்தில் கடத்திரள் அளவைக்கான பாலன வலையமைப்பை அடர்த்தியாக்குதல்.
- எல்லை குறித்தலின் பின் கடத்திரள் அளவை.
- கடத்திரள் படங்கள் மற்றும் கிடைப்படங்களை தயாரித்தல்

மாவட்ட காணிப் பதிவகம்

இவ் அலுவலகம் காணிப் பதிவுக்கு பொறுப்பாக உள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழுள்ள மாவட்ட மட்டத்திலான நிறுவனமாகும். இந்நிறுவனம் காணி நிர்ய அமைவிட அலுவலகம் மற்றும் பிரதேச நிலஅளவை அலுவலகம் ஆகியவற்றின் நெருங்கிய கூட்டிணைவுடன் செயற்படுகிறது.

காணி உரித்துச் சான்றிதழ் வழங்கும் செயன்முறையின் பிரதான படிமுறைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

1) கிராம மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (நிலஅளவை அத்தியட்சகர் , காணி உரித்து பதிவாளர் ஆகியோரின் உதவியுடன் உதவி உரித்து நிர்ணய ஆணையாளர் இனால் ஒழுங்கு செய்யப்படுதல்.)

2) காணி மற்றும் காணி உரித்து சம்பந்தமான ஆரம்ப விசாரணைகள். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

3) கடத்திரள் அளவைகளை மேற்கொண்டு கடத்திரள் வரைபடங்களை தயாரித்தல் மற்றும் அவ் வரைபடத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல். (பொறுப்பு: நில அளவைத் திணைக்களம்)

4) அவசியப்படும் காணித் துண்டுகளுக்கு சட்டப்படியான விசாரணைகளை மேற்கொண்டு உரித்து தொடர்பான பட்டியல் தயாரித்தல். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

5) பிரச்சினையான காணித்துண்டுகளை கையாளுதல். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

6) ஆரம்ப வர்த்தமானி அறிவித்தலை மேற்கொள்ளதல் (உரித்துப் பதிவுச் சட்டத்தின் பிரிவு 12) மற்றும் உரிமைக் கோரிக்கைகளை கோருதல். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

7) ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அது பற்றி விசாரணை செய்தல். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

8) உடைமை தொடர்பில் ஆரம்பத் தீர்மானம் எடுத்தல். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

9) இறுதியாக வர்த்தமானியில் வெளியீடு (உரித்துப் பதிவுச் சட்டத்தின் பிரிவு 14). (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்)

10) உரித்து தொடர்பான பட்டியலை (**Settlement of Title -SOT**) முடிவு செய்து பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு தீர்மானங்களை அறிவித்தல். (பொறுப்பு: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம்)

11) காணி உறுதிப் பதிவேட்டை மூடி (முடிவு செய்து) காணி உரித்துப் பதிவேட்டை ஆரம்பித்தல் மற்றும் உரிய காணியின் காணி உரித்துச் சான்றிதழ்களை வழங்குதல். (பொறுப்பு: பதிவாளர் நாயகம் திணைக்களம்)

உரித்துச் சான்றிதழை பெற காணி உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

- காணி உறுதி அல்லது கொடைப் பத்திரம்
- காணி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு அடையாள அட்டை
- காணிக்குரிய நில அளவை வரைபடத்தின் (**Plan**) நிழற்பிரதி (உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடமொன்று இருப்பின் அதன் நிழற்பிரதி)
- வழக்குத் தீர்ப்பின் மூலம் வந்த உரிமையாக இருப்பின் அவ் வழக்குத் தீர்ப்பின் பிரதி


காணி உரிமையாளருக்குள்ள பொறுப்புக்கள்

- காணியின் சரியான எல்லைகளை நிறுவுதலும், காட்டுதலும்.
- உரித்தை உறுதிப்படுத்தும் மேற்சொன்ன ஆவணங்களைச் சமர்ப்பித்தல்.
- தமது அடையாளத்தை உறுதிப்படுத்திய வண்ணம் தங்களைச் சந்திக்க வரும் எமது உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குதல்.

பிம்சவிய கருத்திட்டத்தின் கீழ் உரித்துப் பதிவு நோக்கத்திற்காக காணித்துண்டு ஒன்றினை தெரிவுசெய்வது எப்படி?

காணி அமைச்சரினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்டு, அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் மாகாணம், மாவட்டம் அல்லது பிரதேசம் ஒன்றில் உரித்துப் பதிவு மேற்கொள்ளப்படும். அவ்வாறான ஒரு பிரதேசம் உரித்துப் பதிவுச்சட்டத்தின் முதலாம் பிரிவின் படி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் காணி உரித்து நிர்ணய ஆணையாளரிடமிருந்து பெறப்படும் ஒரு கோரிக்கையின் பேரில் நில அளவையாளர் நாயகம் அந்தப் பிரதேசத்தை உள்ளடக்கிய கடத்திரள் படத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.

பிம்சவிய கருத்திட்டத்தினை தெளிவுபடுத்துதல்



(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க ஜனவரி மூன்றாம் வாரம் புதிய திட்டம்

## பிலிப்பைன்ஸில் வாழும் இலங்கையர்கள் மத்தியில் மைத்திரி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான தனது பயணத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய இலங்கை - பிலிப்பைன்ஸ் நட்புறவின் மூலம் பிலிப்பைன்ஸில் வாழும் இலங்கையர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் நலன்பேணல்களுக்குத் தேவையான மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றொட்ரிகோ டியுடேர்ட் **(Rodrigo Duterte)** வின் விசேட அழைப்பின் பேரில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு அரசமுறை பயணமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி பிலிப்பைன்ஸில் வாழும் இலங்கையர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பிற்பகல் மணிலா நகரில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்கல்விபெறும்மாணவர்கள், தொழில்வல்லுநர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

உயர்கல்வி பெறும் மாணவர்களின் பிரச்சினைகள், விசா பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

இந்த அனைத்து பிரச்சினைகளையும் பிலிப்பைன்ஸ்க்கான இலங்கை தூதுவரிடம் முன்வைக்குமாறு குறிப்பிட்ட ஜனாதிபதி பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகத் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் பௌதீக வள அபிவிருத்தியின் மூலம் பிலிப்பைன்ஸ் அடைந்துள்ள முன்னேற்றங்களை பாராட்டிய ஜனாதிபதி போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

இன்று இலங்கைக்கு முக்கிய சவாலாக உள்ள போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்துவதற்கு தனது வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விரிவான நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றியும் ஜனாதிபதி பிலிப்பைன்ஸில் உள்ள இலங்கையர்களுக்கு விளக்கிக் கூறினார்.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களை பலப்படுத்துவதற்கு இவ்வருடம் ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்திலிருந்து மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தனது பிலிப்பைன்ஸ் விஜயத்தில் இரண்டு நாடுகளுக்கிடையிலும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இருதரப்பு உடன்பாடு பற்றியும் இலங்கையர்களுக்கு விளக்கிய ஜனாதிபதி இந்த இணக்கப்பாட்டினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார். (இ-4)

வனாத்து முல்லைக்கு விசேட நிபுணர் குழு விரைவு

# பல வெடிபொருட்கள் மீட்பு பண்ணை உரிமையாளர் கைது

(கொழும்பு)

வெடி பொருட்கள் மற்றும் டெட்டனேட்டர் என்பன கைப்பற்றப்பட்ட வனாத்து முல்லை பண்ணையில் உரிமையாளர் பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் நாடு முழுவதிலும் பதிவான புத்தர் சிலைகள் உடைக்கப்படுகின்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸ் விசாரணைக் குழுவொன்றால் இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

புத்தர் சிலைகளை உடைக்கும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கடந்த 16 ஆம் திகதி வனாத்துமுல்லை, மங்களபுர, கரடிப்புவல் போன்ற பிரதேசங்களுக்கு சென்றிருந்தனர்.

இதன்போதே, குறித்த விவசாய பண்ணை சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது 100 கிலோ கிராம் வெடிமருந்தும் 100 டெட்டனேட்டர்களும் கைப்பற்றப்பட்டிருந்தன.

இந்த வெடிபொருட்களின் வகைகளை அறிந்து கொள்வதற்காக நேற்று வனாத்துமுல்லை பிரதேசத்திற்கு நிபுணர்குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், எதற்காக குறித்த வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தகவல்கள் கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் சம்பவம் தொடர்பில் 3 விசேட குற்றப் புலனாய்வுக் குழுக்கள் விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைக் காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களைக் கருத்தில் கொண்டு சட்ட விரோத துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருக்கின்றவர்களை கைதுசெய் கின்ற பொலிஸாருக்கும் அது தொடர்பில் தகவல் வழங்குகின்றவர்களுக்கும் பரிசில்களை வழங்க பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

துப்பாக்கியின் வகையின் அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## வெள்ள நிவாரணப் பொருட்கள் சேகரிப்பில் ஊழல்

# பிரதித் தவிசாளருக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றம்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபை பிரதித் தவிசாளர் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு பிரேரணை நேற்று முன்தினம் 10 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கென நகரசபை உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்டு அனுப்பப்படவிருந்த உணவுப் பொருட்களில் ஊழல் இடம் பெற்றதாக சக உறுப்பினர்களால் கடந்த கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இக் கூட்டத் தீர்மானப்படி சபை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்றால் பிரதித் தவிசாளர் மதனி தாமதமாகவே பதவி விலக வேண்டும் எனவும் இல்லையேல் விசாரணைக் குழு அமைத்து நடந்த விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்து நடவடிக்கையெடுக்கப்படுமென இதற்கு 2 நாட்கள் கால அவகாசம் வழங்கும் தீர்மானம் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானம் தொடர்பில் ஊழல் குற்றம் சாட்டப்பட்ட பிரதித் தவிசாளர் மதனி எந்தக் கருத்தையும் சபைக்கு வழங்காத நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் குறித்த பிரதித் தவிசாளர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இந் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் ஊழல் குற்றம் சாட்டப்பட்ட பிரதித் தவிசாளர் கலந்து கொளளாத சந்தர்ப்பத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக பத்து வாக்குகளும் எதிராக நான்கு வாக்குகளும் வழங்கப்பட்ட நிலையில் குறித்த தீர்மானம் ஆறு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதுடன் மேலதிக நடவடிக்கைக்காக யாழ். மாவட்ட உள்ளூராட்சிஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# டிப்ளோமா கற்கை நெறி திசைமுகப்படுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனத்தினால் வழங்கப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒரு வருட டிப்ளோமா பயிற்சி வகுப்பின் திசை முகப்படுத்தல் நிகழ்வு தியாகி அறக்கொடை நிறுவனத்தில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார். (இ)

# கலைத்தூது அழகியற் கல்லூரியின் பத்தாவது பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரியின் 10 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கலைத்தூது கலையகத்தில் (286, பிரதானவீதி, யாழ்ப்பாணம்) கலைத்தூது அழகியற் கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்சலா அல்போக்சஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ் வில் பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், சிறப்பு விருந்தினராக, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி அ.பீ.திருமகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-107)



யாழ் திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளிக் குழந்தைகள் காப்பக வளாகத்தில் நேற்று பொங்கல் விழா பணிப்பாளர் திருமதி.கர்ணி தனபாலன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக லண்டன் தமிழ் நடுவக அமைப்பின் பிரதிநிதி பொறியியலாளர் தணிகாசலம் செல்வகுமார் கலந்து விழாவை ஆரம்பித்து வைப்பதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் **(MGR)** அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் நேற்று முன்தினம் பாசையூர் எம்.ஜி.ஆர் மன்றத்தின் ஏற்பாட்டில் பாசையூர் கடற்கரை முன்றலில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவச் சிலையருகே இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் எஸ். பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணாகும் 60 வீதமான நீரை யாழ்ப்பாணம் கொண்டுவர திட்டமுன்மொழிவை சமர்ப்பிக்குக

## இரணைமடு நீர்த்தேக்கத்திற்கு விஜயம் செய்த ஆளுநர் பணிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு நீர்த்தேக்கம் மற்றும் நீர்த்தேக்கச் செயற்றிட்ட அலுவலகத்திற்கு நேற்றையதினம் திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆராய்ந்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் இரணைமடு நீர்த்தேக்கத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் வான்கதவுகளின் திருத்தப் பணிகள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களுக்குப் பணிப்புரைகளை வழங்கியிருந்ததுடன் அது தொடர்பிலான முன்னேற்றங்கள் குறித்து ஆராயும் நோக்கிலேயே நேற்றுத் திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இரணைமடு நீர்த்தேக்கத்தின் 14 வான்கதவுகளில் 7 வான்கதவுகளில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து இரணைமடு நீர்த்தேக்கத்தை முழுமையாக ஜனவரி 31 ஆம் திகதி கையளிக்க இரணைமடு நீர்த்தேக்கத்தைப் புனரமைப்பு செய்த தனியார் நிறுவனம் உறுதியளித்துள்ளதுடன் பெப்ரவரி முதல் தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு தன்னார்வ ரீதியான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முன்வந்துள்ளது.

இதேவேளை தற்போது இரணைமடு நீர்த்தேக்கத்தின் 40 வீதமான நீர் மட்டுமே விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 60 வீதமான நீர் சமுத்திரத்தை சென்றடைவதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரும் இரணைமடு நீர்த்தேக்கச் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பணிப்பாளருமான பொறியியலாளர் என். சுதாகரன் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து வீணாக சமுத்திரத்திற்குச் செல்லும் 60 வீதமான நீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவருவதற்கான விசேட செயற்றிட்ட முன்மொழிவை கூடிய விரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்ட ஆளுநர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இதுதொடர்பில் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார். (2)




## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாணவர்களுக்கு சீருடைகள், பாதணிகள்

### வழங்கி வைத்தார் கல்வி இராஜாங்க அமைச்சர்





(கிளிநொச்சி)

கல்வி அமைச்சினால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் 8 ஆயிரத்து 432 பேருக்கு பாடசாலை சீருடை மற்றும் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாடசாலை ரீதியாக இனம் காணப்பட்டு அவர்களுக்கான இந்த கற்றல் உதவிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் 2 ஆயிரத்து 437 மாணவர்களுக்கான குறித்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேபோன்று தர்மபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும் இவ்வாறு பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர், பாடசாலைகளிலிருந்து அழைக்கப்பட்ட மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர்,

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த அரசாங்கத்தினாலும் எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை.

அவர்களுக்கு உதவிகள் வழங்க பல தடவை கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்வி செயற்பாடுகள், ஆசிரியர் பற்றாக்குறைகள் தொடர்பிலும் அவர் இதன் போது தெரிவித்திருந்தார்.

இதேவளை பல பாடசாலைகளில் வகுப்பறை கட்டடங்கள், தளபாட பற்றாக் குறை உள்ளிட்டவை நிலவி வருகின்றது.

அடுத்து வரும் மாதங்களில் ஆயிரத்து 500 ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (2)

## உடையார்கட்டு மகா வித்தி.பொங்கல் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர்

### கட்டடம் அமைத்துத்தருவதாக உறுதி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்கு விஜயம்மேற்கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அங்கு இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்கு சென்று அங்குள்ள குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்

அத்தோடு பாடசாலை நிர்வாகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அந்த பாடசாலையில் அத்திபாரம் போடப்பட்ட நிலையில் காணப்படும் இடத்தில் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருவதற்கும் உறுதியளித்திருந்தார்.

தொடர்ந்து பாடசாலையில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு பாடசாலை குறிப்பேட்டிலும் கருத்துக்களை பதிவிட்டிருந்தார்.

இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம பிரதீபன்,பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், வவுச்சர்களை வழங்கினார் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பண்டாரவன்னி மகாவித்தியாலயத்துக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்,இரண்டு சீருடை துணிக்கு வவுச்சர்கள் மற்றும் காலணிக்கான வவுச்சர் என்பன வழங்கி வைக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதன்போது முதற்கட்டமாக 530 மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி, அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

## மல்வில் கிருஷ்ணர் ஆலய வீதி புனரமைப்பை தவிசாளர் பார்வை

(கண்டாவளை)

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் முன்மொழிவுக்கமைவாக கம்பரலிய வேலைத்திட்டத்தில் புனரமைக்கப்பட்டுவரும் முகாவில் மல்வில் கிருஷ்ணர் ஆலய வீதி புனரமைப்பு பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் பார்வையிட்டுள்ளார்.

முகாவில் வட்டார பிரதேச சபை உறுப்பினர் அருட்ச்செல்வியின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த வீதியை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முன்மொழிவு செய்திருந்தார்.

சுமார் இரண்டு மில்லியன் ரூபாய் பெறுமதியில் குறித்த வீதி புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உபதவிசாளர் கஜன், உறுப்பினர் ரமேஷ் மற்றும் கோவில் நிர்வாகத்தினர், பொது அமைப்பினரும் உடனிருந்தனர்.(2-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாணத்தில்

# படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு குழுக்களை அமைத்து துரிதகதியில் செயற்படுங்கள்

### பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிகப் பணிப்பாளர் பணிப்பு




(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது. சோளம், கரும்பு, இறுங்கு, நெல் ஆகியவற்றை தாக்கக் கூடிய படைப் புழுவின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு குழுக்களை நியமித்து மாகாண விவசாயப் பணிப்பாளர் தலைமையில் துரித கதியில் செயற்படுமாறு அலுவலர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்குள் துரிதகதியில் இயங்கி இப்படைப்புழுவை கட்டுபபடுத்துவதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் முனைப்புடன் இயங்க இருப்பதனால் வடக்கு மாகாணத்தில் துரிதகதியில் ஈடுபடும் குழுக்களுக்கு வடமாகாணத்திற்கான மத்திய அரசின் இணைப்பாளரான பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

அதிக சேதத்தை ஏற்படுத்தும் படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கான விவசாயத்திணைக்களங்களின் நடவடிக்கை தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அண்மைக்காலமாக சோளம், கரும்பு, இறுங்கு மற்றும் நெல் போன்றவற்றை தாக்கக்கூடிய படைப்புழுவின் தாக்கம் இலங்கையில் அறியப்பட்டது.

படைபடையாக உருவெடுத்து அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் இப்புழுவினமானது அருகில் இருக்கும் இந்தியாவின் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு போன்ற பகுதிகளில் இருந்து அம்பாறை, அநுராதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு சேதத்தை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இது தற்போது வடபகுதியிலும் குறிப்பாக சோளப் பயிர்ச்செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு இரவுப்பொழுதில் 100 கிலோமீற்றர் தூரம் பயணிக்கத் தக்கதும் விரைவாக பெருகும் தன்மை உள்ளமையாலும் இப் புழுவானது இலங்கையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவருகின்றது. இதனை கட்டுப்படுத்தும் முகமாக கமத்தொழில் அமைச்சு மத்திய விவசாயத்திணைக்களம், கமநலசேவைகள் திணைக்களம் மற்றும் மாகாண விவசாயத் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணங்களிலும் விவசாயத்திணைக்களமா



னது இதற்குரிய மாகாண இணைப்பாளர்களையும் வளவாளர்களையும் நியமித்து மாவட்ட அடிப்படையிலும் பெரும்பாக உத்தியோகத்தர் அடிப்படையிலும் குழுக்களை நியமித்து மாகாண விவசாயப் பணிப்பாளர் தலைமையில் துரிதகதியில் செயற்படுமாறு அலுவலகர்களை பணித்துள்ளது. இக்குழுக்களில் கிராம சேவையாளர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள் விவசாய போதனாசிரியர்கள் மற்றும் கமநலசேவைக்குழுவின் தலைவர்கள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இனிவரும் இரண்டு வாரங்களுக்குள் துரிதகதியில் இயங்கி இப்படைப்புழுவை கட்டுப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் முனைப்புடன் இயங்க இருப்பதனால் விவசாயிகள் விழிப்படைவதும் தாமாகவே முன்வந்து இக்கட்டுப்பாட்டு பொறிமுறைகளை மேற்கொள்வதும் பொருத்தமானதாக இருக்குமென இப் படைப்புழுவின் கட்டுப்பாட்டுக்கான வடமாகாணத்தில் துரிதகதியில் ஈடுபடும் குழுக்களுக்கு வடமாகாணத்திற்கான மத்தியஅரசின் இணைப்பாளரான பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி. சி.ஜே.அரசகேசரி சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்கின்றார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




## புனித செபஸ்தியார் திருவிழா நாளை

(பூநகரி)

நாடளாவிய ரீதியில் அனைத்து மறை மாவட்டங்களிலும் புனித செபஸ்தியார் திருவிழா ஜனவரி மாதம் 20 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பூநகரி மண்ணித்தலை புனித செயஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி பூநகரி பங்குத்தந்தை றொசானினால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இதேபோல் பூநகரி மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயத்தில் பாஷையூர் மக்களால் வருடாவருடம் ஆவணிமாதம் திருவிழா கொண்டாடப்படுவது வழமையாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-107)

# பேராறு திட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகளை உயர்மட்ட குழு நேரில் சென்று ஆய்வு

### விரைவில் தீர்வு வழங்கப்படும்–அரசாங்க அதிபர் உறுதி

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் சாஸ்திரிகூழாங்குளத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற பேராறு குடிநீர் விநியோகத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான உயர் அதிகாரிகள் கொண்ட குழுவொன்று நேரடியாக பேராறு திட்டப்பிரதேசத்திற்கு சென்று விவசாயிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஹனீபா, மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், வடிகாலமைப்புச் சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் பாரதிதாசன், பிரதேச செயலாளர் உதயராசா, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விஜயகுமார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பாதிக்கப்பட்ட விவசாயிகள் எனப்



பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது விவசாயிகளுடன் செய்துகொள்ளப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது

புதிதாக வழங்கப்பட்ட காணிகளுக்கு ஆவணம் வழங்கல், வயல்பாதைகள் அமைத்தல், காணி அளவீட்டுப் பிரச்சினைகள், கால்வாய் வேலைகள், அணைக்கட்டில் இருந்து வெளியேறும் மேலதிக நீரை மூன்று குளங்களுக்கும் பாய்ச்சுவது, திட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கல் போன்ற விடயங்கள் விவசாயிகள் சார்பில் முன்வைக்கப்பட்டன. அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார். (2-281)

# தைத்திருநாள் பண்பாட்டுவிழா





(கிளிநொச்சி)

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் ஏற்பாட்டில் தைத்திருநாள் பண்பாட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி சாந்தபுரம் முதியோர் சங்கத்துடன் இணைந்து குறித்த நிகழ்வு இடம்பெற்றது. முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் அலுவலக ஊழியர்கள், முதியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பண்பாட்டு ரீதியில் பொங்கலிடப்பட்டதுடன், முதியோர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஸ்ராலின் குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க நினைக்கிறார்

### அமைச்சர் ஜெயக்குமார் காட்டம்



(சென்னை)

குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க ஸ்ராலின் ஆசைப் படுகிறார். அது நிராசையாக முடியும். தி.மு.க. எம்எல் ஏக்கள் தேர்தலை விரும்பவில்லை என அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி** : தி.மு.க. எம்எல் ஏக்கள் குறித்து கூறினீர்கள். அதுபற்றி பட்டியலிட முடியுமா என ஜெ.அன்பழகன் கேட்டுள்ளாரே?

**பதில்**: நேற்று முன்தினம் ஊடகங்களில் இது பெரிய விவாதமாக ஆகியுள்ளது. நான் எந்தக் கருத்தில் தெரிவித்தேன் என்றால், பொதுவாகவே பொதுமக்களிடம் சட்டப்பேரவை தேர்தலைப் பொறுத்தவரை 2021 இல் வர வேண்டும் என்கிற எதிர்பார்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு தேர்தல் நடத்த மக்களுடைய வரிப்பணம் கிட்டத்தட்ட ரூபாய் 3000 கோடி செலவாகும். தேர்தல் அடிக்கடி வரக் கூடாது என்கிற எதிர்பார்ப்பு மக்களிடம் உள்ள நிலையில் ஒரு ஜனநாயக ரீதியில் 2021 வரையில் செயற்பட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசு இது.

2021இல் மக்கள்தான் அதை ஆய்வு செய்கிற அதிகாரம்படைத்தவர்கள் அனைத்து தரப்பு மக்களும் பாராட்டுகிற அரசு. ஆகவே 2021இல் மீண்டும் நாங்கள்தான் மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சியைப் பிடிப்போம். ஆனால் தற்போது ஸ்டாலினுக்கு என்ன அவசரம். அவருக்கு குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடித்து முதல்வர் ஆக வேண்டும் அல்லது ஒட்டுமொத்தமாக இந்த ஆட்சியே இல்லாது தேர்தல் நடக்கவேண்டும் என்கிற எண்ணத்தில் இருக்கிறார். அது நிறைவேறாது. ஆனால் அவர் தேர்தலை விரும்பினாலும் அவரது கட்சி எம்.எல்.ஏக்கள் விரும்பமாட்டார்கள்.

ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்கள் 5 ஆண்டு முழுவதுமாகப் பூர்த்தி செய்யவேண்டும் என்று நினைப்பார்கள். அது அவர்களுக்கே தெரியும். மீண்டும் சீட்டு கிடைக்குமா? அப்படியே கிடைத்தாலும் மீண்டும் வெல்ல முடியுமா? என்ற எண்ணம் இருக்கும். இதைத்தான் அவர்கள் நினைப்பார்கள்.

ஆகவே இருக்கும் இரண்டரை ஆண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்டு போகத்தான் நினைப்பார்கள். ஏனென்றால் எம்.எல்.ஏ. பதவி ஒரு மிகப்பெரிய பதவி. மக்களுக்கு சேவை செய்யக்கூடிய ஒன்று. அதனால்தான் அவர்கள் தேர்தல்வருவதை விரும்பவில்லை.

திமுக எம்.எல்.ஏக்கள் விரும்பாத ஒன்றை ஸ்டாலின் எந்த வகையிலாவது நிறைவேற்ற ஆசைப்பட்டால் அவரது ஆசை நிராசையாக முடியுமென தெரிவித்துள்ளார். (4-8)

## உடுமலையில் கார் மரத்தில் மோதிய விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலி

(தாராபுரம்)

உடுமலையில் கார் மரத்தில் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம்நேதாஜி தெருவை சேர்ந்தவர் முத்துசாமி (வயது 62). ஓய்வு பெற்ற அரசு போக்குவரத்து கழக சாரதி. இவரது மனைவி ஜோதிமணி (60). இவர்களது பேரன் செல்வருத்ரன் (3). உறவினர் நாச்சிமுத்து (75). ஆகியோர் ஒரு காரில் உடுமலையில் உள்ள முத்துசாமியின் இளைய மகளை பொங்கல் பண்டிகைக்கு அழைப்பதற்காக சென்றனர்.

காரை முத்துசாமி செலுத்திச் சென்றார். கார் கொண்டார சம்பாளையம் அருகே சென்ற போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மரத்தில் மோதியது. இந்த விபத்தில் ஜோதிமணி, நாச்சி முத்து, 3 வயது சிறுவன் செல்வருத்ரன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர்.

உயிருக்கு போராடிய முத்துசாமியை அந்த வழியாக சென்றவர்கள் மீட்டு கோவையில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த தகவல் கிடைத்ததும் தாராபுரம் பொலிஸார் விரைந்து வந்து விபத்தில் பலியான 3 பேரின் உடலை மீட்டு திருப்பூர் அரசு வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்து விசாரணை நடத்தி வருகிறார்களென தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-8)

## கார்க்குண்டு வெடிப்பு; 9 பேர் உயிரிழப்பு

(அடிஸ் அபாபா)

கொலம்பிய தலைநகர் பொகோடாவில் இடம்பெற்ற பாரிய கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 9 பேர் உயிரிழந்தனர்.



நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம் பெற்ற இந்த குண்டு வெடிப்பில் 54 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

ஜெனரல் சன்டென்டர் பொலிஸ் கல்லூரியை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட கார் ஒன்று கல்லூரியின் சுவரில் மோதி வெடிக்க வைக்கப்பட்ட நிலையில் அங்கு பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் பயிலுநர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவத்தில் காரை இயக்கிய சாரதியும் சம்பவ இடத்திலேயே பலியானதாகவும், குறித்த நபர் ஜோஸ் அல்டேமார் ரோஜாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்த சாரதி சாம்பல் நிற நிஸான் ரக கார் ஒன்றை செலுத்தி வந்ததாகவும் அதில் 80 கிலோகிராம் உயர் தாக்கம் மிக்க பென்டோலைட் வெடிபொருட்கள் இருந்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (4-8)

## பேருந்து தட

## இருபது பேர்

### 33 பே



(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன், 33 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

எதியோப்பியாவின் மேற்கு பகுதியில் அமைந் துள்ள வொல்லேகா பகுதியில் பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனு மதிக்கப் பட்டுள்ளதாகவும், அவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், இதன்காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

விபத்து இடம்பெற்ற பகுதிக்கு விரைந்துள்ள மீட்பு படையினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் விபத்து தொடர்பாக அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிடப் படுகின்றது. (4-8)


## வெடிகுண்டு தாக்குதல்;

(நியூயோர்க்)

கொலம்பிய தலைநகரான பொகோடாவில் உள்ள பொலிஸ் அகடமி அருகே நடைபெற்ற கார் வெடிகுண்டு தாக்குதல் குறித்து ஐ.நா. கடுமையான கண்டனத்தினை வெளியிட்டுள்ளது.

மத்திய அமெரிக்க நாடான கொலம்பியாவின் தலைநகரம் போகோடா. இங்குள்ள பொலிஸ் அகடமி அருகே கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ.நா சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளது.



## பயங்கரவாதத் தா

## 10 பேர் உயிரி

மாலியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் மற்றும் எம்.எஸ்.ஏ. கிளர்ச்சி இயக்கத்தினர் என மொத்தம் 10 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள மாலி நாட்டின் வடகிழக்கு பகுதியில் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். மாலி-நைஜர் எல்லையை ஒட்டிய பகுதிக்குள் கடந்த 15 ஆம் திகதி நுழைந்த பயங்கரவாதிகள், பொதுமக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இதில், எம்.எஸ்ஏ. கிளர்ச்சி இயக்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என மொத்தம் 10 பேர் உயிரிழந்ததாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பயங்கரவாத தாக்குதல் மினாகாவிலிருந்து




45 கிலோமீற்றர் தூரத்தில் நடந்தது. இப் பகுதியில் கடந்த 2018 ஆம் ஆண்டில் நடந்த பயங்கரவாதிகளின் வன்முறைத் தாக்குதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்புரள்வு

உயிரிழப்பு

ர் படுகாயம்



# கனடாவின் கருத்து சீன மக்களை அச்சுறுத்தும் விதமாக உள்ளது

## சீனா குற்றச்சாட்டு

(பீஜிங்)

சீனாவில் அண்மையில் கனேடிய நாட்டவர்கள் கைது செய்யப்பட்டமை 'தன்னிச்சையான கைதுகள் என்றும், இது அனைத்து நாடுகளுக்கும் ஒரு அச்சுறுத்தல் என்றும் கனடா எச்சரித்திருந்தது.

எனினும் இந்த விடயம் சீன குடிமக்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கும் விடயமாக உள்ளதாக சீனா நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.



அத்துடன்எந்தவொரு கனடா நாட்டவரையும் தாம் தன்னிச்சையாக தடுத்து வைக்கவில்லை என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சங்யிங் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்டியா ப்ரீலேண்ட் வெளியிட்ட அறிக்கையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பீஜிங் தலைமை தன்னிச்சையாக மரண தண்டனையை நிறைவேற்ற முனைவதாக குற்றம் சாட்டினார். அத்துடன் சர்வதேச தலைவர்கள் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுகோளை அடுத்து, சீனாவின் ஹுவாவி நிறுவனத்தின் தலைமை நிதி அலுவலர் மெங் வாங்ஷு கனேடிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதன் காரணமாக சீனாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான உறவில் விறைப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. (4-8)


# ஆப்கானில் தங்கச் சுரங்கம் சரிந்ததில் 8 பேர் உயிரிழப்பு; 2 பேர் படுகாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தங்கச் சுரங்கம் சரிந்து விபத்துக்குள்ளானதில், சுரங்கத்தினுள் வேலை செய்துகொண்டிருந்த 8 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் வடகிழக்கு மாகாணமான படகாஷனில் தங்கச் சுரங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இதில், ராகிஸ்தான் மாவட்டத்தில் உள்ள ஒரு தங்கச் சுரங்கத்தில் நேற்று தொழிலாளர்கள், தங்கத் தாதுக்களை தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.



அப்போது திடீரென சுரங்கத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கி 8 தொழிலாளர்கள் பலியானார்கள். 2 பேர் காயம் அடைந்தனர்.

இந்த ஆண்டின் இரண்டாவது சுரங்க விபத்து இது வாகும். இதே மாகாணத்தில் கடந்த 4ஆம் திகதி ஏற்பட்ட சுரங்க விபத்தில் 40 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள சுரங்கங்களில் பெரும்பாலான சுரங்கங்கள் மிகவும்பழைமையானவை அவை சரியான முறையில் பராமரிக்கப்படாததால், அடிக்கடி விபத்து ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. (4-8)

# ஐ.நா. கண்டனம்



ஏற்றுக்கொள்ள முடியாத குற்றவியல் சம்பவம் நடந்துள்ளது. வன்முறையில் இருந்து விலகி, வளமான மற்றும் அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிரான தாக்குதல். இதுபோன்ற தாக்குதல்களை வன்மையாக கண்டிக்கிறோம்' என ஐநா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இக்குண்டுவெடிப்பு, நகரின் தெற்கில் ஜெனரல் சன்டர்டர் அகடமியில் ஒரு விழாவின் நிறைவில் நடைபெற்றுள்ளது.

இதுவரை, தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் குறித்து எந்த தகவல்களும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4-8)

# க்குதல் ரிழப்பு

நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இறந்தவர்களில் பெரும்பாலான மக்கள் புலானி இனத்தவர்கள் ஆவர்.

தற்போது நடந்த தாக்குதலுக்கு எம்.எஸ்.ஏ. இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இரு தரப்பினருக்கிடையிலான மோதலின் முடிவில் முதியவர்கள் உள்ளிட்ட 20 பேரை பயங்கரவாதிகள் கொலை செய்ததாகவும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம், இது குறித்து வல்லுநர்கள் குழு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிடம் அளித்துள்ள அறிக்கையில், "பயங்கரவாத குழுக்களுக்கும், சர்வதேச மற்றும் மாலி அரசுப் படைகள் ஆகியவற்றிற் கும் இடையேயான மோதல்களால் பொது மக்களிடையே பதற்றம் அதிகரித்துள்ளது", என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012இல் முக்கியமான பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருந்த பயங்கரவாதிகளின் எழுச்சியை தடுப்பதற்கு மாலி படைகளுக்கு பிரான்ஸ் உதவி செய்தது. அதன்பின்னர் பயங்கரவாதிகளை தனிமைப்படுத்த வடிவமைக்கப்பட்ட 2015ஆம் ஆண்டின் சமாதான உடன்படிக்கை இருந்தபோதிலும், நாட்டின் பெரும்பாலான பகுதிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (4-8)

# எச்.ஐ.வி இரத்தம் ஏற்றப்பட்ட பெண்ணுக்கு பெண் குழந்தை

(சென்னை)

எச்.ஐ.வி இரத்தம் ஏற்றப்பட்ட கர்ப்பிணிப் பெண், மதுரை ராஜாஜி அரச வைத்தியசாலையில் பெண் குழந்தையொன்றை பெற்றெடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிறந்த குறித்த குழந்தைக்கு தனியான விசேட பிரிவில் வைத்து வைத்தியர்கள் சிகிச்சையளித்து வருகின்றனர்.



விருதுநகர் மாவட்டம் சாத்தூரைச் சேர்ந்த கர்ப்பிணிக்கு எச்.ஐ.வி.தொற்றுடன் கூடிய இரத்தம் ஏற்றப்பட்ட அதிர்ச்சிகரமான சம்பவம் கடந்த மாதம் இடம்பெற்றது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு, மதுரை அரச ராஜாஜி வைத்திய சாலையில், தொடர்ந்து தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் குறித்த பெண்ணுக்கு நேற்று முன் தினம் மாலை பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது. ஜனவரி 30ஆம் திகதி குழந்தைப் பிறக்கும் என மருத்துவர்கள் தெரிவித்த நிலையில், நேற்று முன்தினம் சுகப்பிரசவத்துடன் குழந்தைப் பிறந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அரச ராஜாஜி வைத்திய சாலையின் தலைமை வைத்தியர் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளதாவது.

குறித்த குழந்தை 1.75 நிறையை கொண்டுள்ளது. சாதாரணமாக ஒரு குழந்தை 2.5 முதல் 3.5 வரை நிறை காணப்படும். ஆனால் இக் குழந்தையின் எடை குறைவாகவுள்ள போதும் ஆரோக்கியமாகவே உள்ளது.


இருப்பினும் எடை குறைவாக காணப்படுகின்றமையினால், அக்குழந்தைக்கு சிறப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதுடன், எச்.ஐ.வி தொற்றாமல் இருப்பதற்கு வேண்டிய தடுப்பு மருந்துக்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 45 நாட்களுக்கு பின்னரே எச்.ஐ.வி பரிசோதனை செய்யப்படும்" என சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார். (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு முற்றுமுழுதாக பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது

## வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு வரைபு முற்றுமுழுதாக பெரும்பான்மை மக்களுக்கு எதிரானதாகவே காணப்படுகின்றது எனப் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதன் தாக்கம் எதிர்காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை கூட்டு எதிரணியாக அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை எதிர்க்கின்றமை, தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள். அதன் காரணமாகவே புதிய அரசியலமைப்பை எதிர்க்கின்றார்கள் என்று எம்மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.


புதிய அரசியலமைப்பில் பெரும்பான்மை மக்களுக்கு அதாவது சிங்கள மக்களுக்கு எதிரான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவர்கள் குறிப்பிடுவதைப் போன்று அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் எதிர்காலத்தில் இரண்டு இன மக்கள் மத்தியிலும் பல செயற்பாடுகளின் போது பாரிய பிரச்சினைகள் ஏற்படும்.

மீண்டும் சிவில் யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான சூழல் இதன் காரணமாக ஏற்படும் நிலையும் தோற்றம் பெறலாம். அவ்வேளையில் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். இதன் காரணமாகவே கூட்டு எதிரணி புதிய அரசியலமைப்பைக் கடுமையாக எதிர்க்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஞானசாரரின் உரைகள் இந்துக்களையும் மத மாற்றத்திலிருந்து பாதுகாத்துள்ளது

## விடுதலை செய்யக்கோருகிறது இந்து சம்மேளனம்



(கொழும்பு)

சுதந்திர தினத்திற்கு முன்னர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை இந்து சம்மேளனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளது.

ஞானசார தேரரின் மத மாற்றத்திற்கு எதிரான எழுச்சிமிக்க உரைகள் இலங்கை பௌத்தர்களை மாத்திரமன்றி, இலங்கை இந்துக்களையும் மதமாற்றத்திலிருந்து பாதுகாத்துள்ளது.

விடுதலை செய்யப்படுகின்ற தேரர் கட்சி அரசியலுக்கு அப்பால் தேசத்திற்காக பல உயரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

எனவே சுதந்திர தினத்திற்கு முன்னர் கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை இந்து சம்மேளனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளது.

எமது இக்கோரிக்கை உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் அமைந்திருக்கும்.

எனினும் ஞானசார தேரரின் மதமாற்றத்திற்கு எதிரான எழுச்சிமிக்க உரைகள் இலங்கை பௌத்தர்களை மாத்திரமன்றி, இலங்கை இந்துக்களையும் மதமாற்றத்திலிருந்து பாதுகாத்துள்ளது.

விடுதலை செய்யப்படுகின்ற தேரர் கட்சி அரசியலுக்கு அப்பால் தேசத்திற்காக பல உயரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

எனவே சுதந்திர தினத்திற்கு முன்னர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கோருகின்றோம் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# 60 ஆயிரம் மில்லியன் செலவு

# உயர்கல்வித்துறையில் பொன்னான யுகம்

## அமைச்சர் ஹக்கீம் பெருமிதம்



(குருவிட்ட)

பல்கலைக்கழகத்தினுள் மாணவர்களை உள்வாங்கும் எண்ணிக்கையை 6 ஆயிரத்து 618 ஆல் அதிகரித்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சை நான் பொறுப்பேற்கும் போது 24 ஆயிரத்து 540 என்ற எண்ணிக்கையான மாணவர்களே பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர்.

இப்போது அதனை 31 ஆயிரத்து 158 ஆக அதிகரிக்கச் செய்துள்ளோம். உயர்கல்வித்துறையில் இந்த நான்கு வருட காலத்திற்குள் பொன்னான ஒரு யுகத்தை உருவாக்கி அதன் வளர்ச்சிக்காக மட்டும் 60 பில்லியன் அதாவது 60 ஆயிரம் மில்லியனை இந்த அரசு செலவிட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் திறப்புவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் குருவிட்ட ஏதன்டவல பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இயற்கையின் இரகசியம்

உங்களுக்கு எரிச்சல் வருவது போல ஒரு கேள்வி கேட்கட்டுமா? நெல்லிக்காய் ஏன் நெல்லிக்காய் மாதிரி இருக்கு? அது ஏன் அவரைக்காய் மாதிரி இருக்கக் கூடாது!

உங்களுக்குக் கோபம் வருவதற்குள்ளே நானே சொல்ல வந்த விடயத்துக்கு வந்துவிடுகிறேன். இயற்கை இந்த உருவங்களில் சில இரகசியத்தை மறைத்து வைத்திருக்கிறது.

எமது உடம்பிற்குள்ளே எத்தனையோ உறுப்புக்கள் இருக்கின்றன. எமது உடம்புக்குள்ளே இருக்கும் சில உறுப்புக்களுக்கும் காய், பழம் இதனுடைய உருவத்திற்கும் ஒற்றுமை இருக்கிறது!

உதாரணத்திற்கு எமது உடம்பில் இருதயம் இருக்கிறது! தாமரை மொட்டும் அதுமாதிரியே இருக்கு! எமது உடம்பில் சிறுநீரகம் (Kidney) இருக்கிறது! அவரை விதையும் முந்திரி விதையும் அதுமாதிரியே இருக்கிறது!

இயற்கையில் அமைந்திருக்கும் இந்த உருவ ஒற்றுமை தற்செயலாக அமைந்ததாக இருக்குமா? இல்லை இதற்கு ஏதாவது அர்த்தம் இருக்குமா? ஆயுர்வேதம் இதைப்பற்றி ஓரளவுக்கு ஆராய்ச்சி செய்திருக்கிறது.

அதாவது இந்த உருவ ஒற்றுமை சம்பந்தமாக நமது முன்னோர்கள் கொஞ்சம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இப்போது Indian Walnut என்று சொல்கிறோமே... வாதுமை அதனுடைய உருவம் எப்படி என்றால்...

மேலே கடினமான ஓடு... உள்ளே அந்த ஓட்டில் ஒட்டாமல் களை தனியாக இருக்கும்! எமது தலைக்கும் இந்த அமைப்புக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது! மனிதனுக்கு மண்டை ஓடு கடினமாக இருக்கிறது!

உள்ளே மூளை–மண்டை ஓட்டில் ஒட்டாமல் தனியாக இருக்கிறது! ஒற்றுமை புரியுதா! வாதுமையினுடைய மேல் ஓடுதான் மண்டை ஓடு! அதற்குள்ளே இருக்கும் களைதான் மூளை! சரி அதற்கு என்ன இப்போது என்று கேட்கிறீர்களா?

மத்திய கிழக்கு நாடுகளில் இருப்பவர்களும் ரஷ்யாவில் வடபகுதியில் இருப்பவர்களும் இந்த 'வாதுமை'யை எதற்கு உபயோகப்படுத்துகிறார்கள் தெரியுமா?

மூளை வளர்ச்சிக்கு 'டொனிக்'கா உபயோகப்படுத்துகிறார்கள். அப்படியென்றால் உருவத்தினுடைய ஒற்றுமைக்கும் அதனுடைய ஒற்றுமைக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது மாதிரித் தெரியவில்லை.

அதுதான் இயற்கை மறைத்து வைத்திருக்கும் இரகசியமாக இருக்குமோ? அவரை விதை இருக்கிறதே! Kidney மாதிரித்தானே இருக்கிறது! அமெரிக்காவிலேயும் ஒரு பெரிய அவரை இனம் இருக்கிறது! அதற்குப் பெயரே Kidney beans!

அவரை விதையும் எமது உடம்பில் இருக்கும் சிறுநீரகமும் உருவத்தில் ஒரே மாதிரியாக இருக்கிறது! இல்லையா? இப்போது ஆச்சரியம் என்னவென்றால்... சிறுநீரகத்தைச் சரியாக வேலை செய்ய வைப்பதற்கு அவரை விதையில் இருந்து மருந்து தயார் செய்கிறார்கள்.

அதாவது இந்த அவரை விதை ஒரு சிறந்த ' Diuretic' காகப் பயன்படுகிறது! அதுமட்டுமில்லை! இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைப்பதற்கு அவரைத் தோடுகள் தான் உபயோகப்படுகிறது!

அது இருக்கட்டும்... மனிதனுடைய உயிரணுவை Sperm என்று சொல்லுவார்கள்! மைக்ராஸ்கோப் மூலமாக அதைப் பார்க்கலாம். தலை, நடுப் பகுதி, வால் இப்படி மூன்று பகுதி இருக்கும். அதில் ஆண், பெண் உயிரணுக்கள் ஒன்று சேர்ந்த உடனே அந்த Sperm இன் நடுப்பகுதியும் வாலும் தனியாகப் போய்விடும். தலைப்பகுதி மட்டும் இருக்கும்! மனிதன் என்னும் பயிர் உருவாக ஆரம்ப விதை இதுதான்!

இது எப்படி இருக்கும் தெரியுமா? 'எள்' விதை மாதிரி இருக்கும்! நமது முன்னோர்கள் ஆண், பெண் மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கு இந்த 'எள்' ஐத் தான் கொடுப்பது வழக்கம். அப்புறம், இதயக் கமலம் என்று சொல்லுவோம்.

கமலம் என்றால் தாமரைப்பூ! அது காலையில் மலருகிறது, மதியம் விரிகிறது, மாலையில் சுருங்குகிறது! நமது இதயமும் அதே மாதிரிச் சுருங்கி விரிகிறது! இதயத்தினுடைய நடவடிக்கையும் தாமரையினுடைய நடவடிக்கையும் ஒன்றாக இருக்கிறது இல்லையா?

இப்போது பாருங்கள்... இதய பலவீனத்தைப் போக்குவதற்குத் தாமரைதான் உபயோகப்படுகிறது! கொய்யாப்பழம் இருக்கிறதே அதைத் தலைகீழாக வைத்துப் பார்த்தால்... அதனுடைய உருவமும் கர்ப்பப் பையினுடைய உருவமும் ஒத்து இருக்கும்! Uterus என்று சொல்கிறார்கள் அல்லவா அதுதான்! கருப்பைக் கோளாறுகளைச் சரிசெய்யக் கொய்யாப்பழம் தான் உபயோகப்படுகிறது!

நெல்லிக்காயைக் கண்ணுக்கு நேராக வைத்துப்பாருங்கள்! நடுவில் விதை மூழ்கி இருப்பது போல் தெரியும்! நமது கண்ணும் அப்படித்தான். கருவிழி நடுவில் இருக்கும்!

கண் சம்பந்தமான 'டொனிக்' நெல்லிக்காயில் இருந்து தயாராகிறது! அவரை விதை மாதிரியே முந்திரிப் பருப்பில் இருந்தும் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட மருந்து தயார் செய்கிறார்கள்! இதனால் தான் என்ன சொல்கிறேன் என்றால்...

நமது உடம்பிலே தான் பிரபஞ்சம்... இந்தப் பிரபஞ்சம் தான் நமது உடம்பு! என்ன ரொம்பக் குழப்புகிறேனோ? படைப்பு இரகசியங்கள் ஏராளம் இருக்கிறது... இதுவரைக்கும் நாம் புரிந்துகொண்டது ஒரு துளிதான்!


இப்போது நான் உங்களிடம் சொன்னதையெல்லாம் கொஞ்ச நாளைக்கு முன்னர் என் சிநேகிதன் ஒருத்தனிடம் ரொம்பச் சீரியஸாகச் சொல்லிக்கொண்டிருந்தேன்... அவன் குதர்க்கமாக ஒரு கேள்வி கேட்டான்.

'அவரைக்காய், நெல்லிக்காய், கொய்யாக்காய் என்று சொல்கிறாய் அதெல்லாம் சரி... பூசணிக்காய் ஏன் பந்து மாதிரி இருக்கிறது...?, புடலங்காய் ஏன் பாம்பு மாதிரி இருக்கிறது...?' இப்படி எல்லாம் கேட்க ஆரம்பித்துவிட்டான்... முழித்துப் போய்விட்டேன்! தெரிந்ததைச் சொல்லலாம்... தெரியாததை எப்படிச் சொல்ல முடியும்! ஆனைக்கு அர்றம் என்றால் குதிரைக்கு குர்றம்மா?

'ஏன் சேர்... நீங்கள் சொல்லுங்கள்! உருளைக்கிழங்கு போண்டா என்றால் உள்ளே உருளைக்கிழங்கு இருக்கும்! அதற்காக மைசூர் போண்டா என்றால்... உள்ளே மைசூரா இருக்கும்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடங்கல் கல்வியும் அதன் முக்கியத்துவமும்



மனிதனின் அடிப்படை உரிமைகளில் முதன்மையானது கல்வி ஆகும். உள்ளடங்கல் கல்வி என்பது ஒரே வகுப்பில் சேர்ந்து கல்வி பயில்வதாகும். கற்றல் திறன் குறைபாடு உடையவர்கள் பலமொழி பேசுபவர்கள்.பல்வேறு பண்பாடு கொண்டவர்கள்.அனைவரும் ஒன்றாகக் கல்வி பயில்வதற்கு உள்ளடங்கல் கல்வி எனப் பெயர் பெறும்.

"சகலருக்கும் கல்வி" என்ற அடிப்படையில் குறைபாடுடைய பிள்ளைகள் அல்லது குறைபாடற்றும் கல்வி மறுக்கப்பட்ட பிள்ளைகள் அனைவரும் சாதாரண வகுப்பறையில் ஒன்று சேர்வதே உள்ளடங்கல் கல்வியின் பிரதான நோக்கம் ஆகும். இவ்வாறான வகுப்பறையில் கல்வியில் பங்குபற்றுதலும் கல்விக்கான சம வாய்ப்பும் ஊக்குவிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல இவ்வாறான மாணவர்களிற்கு ஏற்படக்கூடிய உளவியல் பாதிப்புக்களும் தவிர்க்கப்படுகின்றது. தன்னால் முடியாது. தனக்கும் கல்விக்கும் வெகுதூரம் தான். எதற்கும் பொருத்தமற்றவர் என்று எதிர் மனப்பாங்கில் உள்ள மாணவர்களை சாதகமாக்கிக் கொள்வதில் உள்ளடங்கல் கல்வி பெரும் பங்காற்றுகின்றது. உள்ளடங்கல் கல்வியினூடாக இயலாமை உடைய மாணவர்களும் சாதாரண மாணவர்களும் ஒன்றிணைந்து கொள்வதற்கு வழி ஏற்படுகின்றது. இதனை 4 முறைகளில் நடைமுறைப்படுத்தலாம்.

•உடல் தொடர்பான ஒன்றிணைப்பு

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் சாதாரண பிள்ளைகளுக்குமிடையே உடல்ரீதியான இடைவெளியை இத்தகைய ஒன்றிணைப்பு குறைக்க உதவுகின்றது.

•செயற்பாட்டு தொடர்பான ஒன்றிணைப்பு

வகுப்பறைச் செயற்பாடுகளில் இருசாராரும் இணைந்து பணியாற்றுவதற்கு உள்ளடங்கல் கல்வி மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. குழுச் செயற்பாடு விளையாட்டு வகுப்பறைக் கடமைகளில் இயலாமை உடைய பிள்ளைகள் பங்காற்றும் பொழுது அவர்களது ஆளுமை விருத்தி செய்யப்படுகின்றது.

•சமூகஒன்றிணைப்பு

இதன் மூலம் சமூகரீதியான இடைவெளி குறைக்கப்படுகின்றது. தொடர்பாடல் திறன், ஒருவருக்கு ஒருவர் உதவுதல் போன்ற விழுமியப் பண்புகள் விருத்தி செய்யப்படுகின்றன. இதன் மூலம் சமூகமயமாதலுக்கு அத்திபாரம் இடப்படுகின்றது.

•சமுதாய ஒன்றிணைப்பு

சமூகத்தில் தானும் ஒரு பிரஜை என்ற நம்பிக்கை இதன் மூலம் உருவாகின்றது. சமுதாயப் பொறுப்புக்களை முன்னின்று ஏற்றுக் கொள்வதற்கும் இணைந்து பணியாற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இது ஒரு தழுவலுடன் கூடிய ஒருமுறையாகக் காணப்படுகின்றது. ஆதலால் இது ஒரு நெகிழ்வுத் தன்மையுடனான விஷேட கல்விச் செயற்பாடாகக் கருதப்படுகின்றது. எல்லா மாணவர்களும் கல்வியைப் பெறக் கூடிய சூழ்நிலை இங்கு காணப்படும். அதாவது விசேட தேவைகளுடைய மாணவர்களின் பிரச்சினைகள் முன்னுரிமைப்படுத்தப்படாது அவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் அவர்களுக்கு ஏற்றாற் போல் இயைபுபடுத்தப்பட்ட நிலையே இங்கு காணப்படும். இம்முறையின் கீழ் வித்தியாசமான ஆற்றல்களுடைய பிள்ளைகள், வேறுபட்ட இனக்குழுவில் இருந்துவரும் பிள்ளைகள், வித்தியாசமான வயது மட்டங்களுடைய பிள்ளைகள், பால் ரீதியான வேறுபாடுகளுடைய பிள்ளைகள், பிள்ளைகளின் எண்ணிக்கையில் வேறுபட்ட தன்மை போன்றன அதிகமாகக் காணப்படும். அதாவது பிள்ளைகள் பல்வேறுபட்ட விசேட ஆற்றல்களைக் கொண்டு வகுப்பறையில் காணப்படுவார். இங்கு பிள்ளைகளின் வயது ரீதியான தரப்படுத்தல் காணப்படமாட்டாது. மாறாக மாணவர்களின் ஆற்றல்கள் இயலுமைக்கு அமைவாக வகுப்பில் மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள்.

அத்துடன் வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கையில் ஒருமித்த தன்மை காணப்படமாட்டாது. உதாரணமாக ஒரு வகுப்பில் 15 மாணவர்களும் மற்றைய வகுப்பில் 5 மாணவர்களும் காணப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம்.

சிறப்பாகக் கல்வி உள்ளடக்கங்களும் பாடத்திட்டமும் வகுப்பறைச் செயற்பாடுகளும் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கமைய மாற்றியமைக்கப்பட்டிருக்கும். உள்ளடங்கல் கல்வியின் பிரதான நோக்கம் அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குதல் என்பதால் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப மாணவர்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றார்கள். எனவே ஒவ்வொரு மாணவனும் சுயமாகவும் சுதந்திரமாகவும் செயற்படும் வகையில் வகுப்பறை பௌதீகச் சூழல் மாற்றியமைக்கப்படுகின்றது. மாணவர்கள் சுதந்திரமாகவும் விருப்புடனும் செயற்படும் வகையிலான தோழமை மிக்க வகுப்பறைச் சூழல் காணப்படுதல் இங்கு சிறப்பம்சம் ஆகும்.

உலக விசேட தேவைக் கல்வி சாலமான்கா (Salamanca) மாநாடு

ஸ்பெயின் நாட்டின் சாலமான்கா நகரில் 92 அரச பிரதிநிதிகள் மற்றும் 25 சர்வதேச அமைப்புக்களைச் சார்ந்து 300 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பங்குபற்றுதலுடன் ஜூன் 1994 இல் விசேட தேவைகள் சார் கல்வி பற்றிய மாபெரும் மாநாடு நடைபெற்றது.

"அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமனான உள்ளடங்கல் கல்வியை வழங்குவற்கு அடிப்படைக் கல்விக் கொள்கையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றம்" இம் மாநாட்டில் பிரதான கருப்பொருளாகும். அதாவது பாடசாலைகள் அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாக்கவேண்டும். குறிப்பாக விசேட தேவைகள் சார் கல்வி தேவைப்படும் குழந்தைகள் மேல் கரிசனையுடன் செயற்படவேண்டும்.

உலக விசேட தேவைக் கல்வி சாலமான்கா (Salamanca) மாநாடு அறிக்கையில் பின்வருவன வலியுறுத்தப்பட்டது.

•அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி ஒரு அடிப்படை உரிமையாகும். எனவே ஒவ்வொருவருக்கும் கட்டாயக் கல்வி அவசியம் என்பதுடன் அவர்களுக்கு கற்றலுக்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

•ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமான நடத்தைகள் விருப்பங்கள் இயல்புகள் மற்றும் கல்வித் தேவைகளைக் கொண்டுள்ளனர்.

•மேற்படி மாறுபட்ட பண்புகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் ஏற்றவகையில் கல்வித் திட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

•விசேட கல்வித் தேவைகள் உடைய பிள்ளைகளின் தேவைகள் வழக்கமான பாடசாலை முறைகளினூடாக நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

•அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலைகள் பயனுள்ள கல்வியை வழங்குவதுடன் கற்றலை செயற்றிறன் மிக்கதாகவும் மற்றும் செலவு குறைந்ததாகவும் மேம்படுத்த வேண்டும். Salmanca அறிக்கை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்ப்பது

•தனிமனித வேறுபாடின்றி சகல சிறுவர்களுக்கும் உயர்ந்த நோக்கங்களைக்கொண்ட கல்வியை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது

•சட்டம் கொள்கைகளுக்கேற்ப உள்ளடங்கல் கல்விக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

•விசேட தேவையுடைய மாணவர்களது கல்வியை மையப்படுத்தி செயற்றிட்டங்களை விருத்தி செய்ய வேண்டும்.

•செயற்றிட்டங்களை வழங்கி அவற்றை ஏனைய நாடுகளில் இயங்கும் பாடசாலைகளுடன் பரிமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

•சிறுவர்கள் மற்றும் வளர்ந்தோருக்கான கல்வி வழங்குதல்களை திட்டமிட, கண்காணிக்க மற்றும் மதிப்பீடு செய்யப் பொருத்தமான வழி முறைகளை ஏற்படுத்த வேண்டும்.

•விசேட கல்வித் தேவைகளுக்குத் திட்டமிட்ட முடிவுரைகளை மேற்கொள்ளும் போது குறைபாடுள்ள சமூகம் மற்றும் மாணவர், பெற்றோர்கள் மற்றும் அமைப்புக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

எனவே விசேட தேவையுடைய மாணவர்களை சமூகத்தில் ஒதுக்கி வைக்காது அவர்களைச் சமூகத்தில் சிறந்த பிரஜையாக உருவாக்க முன்வருதல் வேண்டும்.

சி.சசிதரன்,
ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

# செய்தித்துளிகள்

## சமய தீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையில் சமயதீட்சை வழங்கல் நாளை மறு தினம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தைப்பூச தினத் தன்று நடைபெறவிருப்பதால் சமய தீட்சையைப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணம் கல்லூரி வீதியிலுள்ள சைவபரிபாலன சபை அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## உப பீடாதிபதியாக சாகர நியமனம்



(கொழும்பு)

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பலக்லைக்கழகத்தின் புதிய உப பீடாதிபதியாக எயார் வைஸ் மார்ஷல் சாகர கொடதெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். (இ-4)

## சதாசிவம் கவலை

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 600 ரூபாவிற்கு மேல் வேதன அதிகரிப்பை வழங்க முடியாது என அண்மையில், பெருந்தோட்டத்துறை அமைச்சர் வெளியிட்ட கருத்துக்கு, மலையக மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவிக்காமை குறித்து கவலை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே வேதன உயர்வு தொடர்பில் கட்சி பேதங்களின்றிச் செயற்படுவது அவசியம் என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார். (இ-4)

## பல வெடிபொருட்கள் மீட்பு புத்தளத்தில் நால்வர் கைது

(புத்தளம்)

புத்தளம் - வண்ணாத்துவில்லு-லெக்டோவத்த பிரதேச கமநல பண்ணையிலிருந்து மீட்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பில் நான்கு பேர் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

100 கிலோ கிராம் வெடிப்பொருட்கள் மற்றும் 100 டெடனேட்டர்கள் என்பன மீட்கப்பட்டதாக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். வெடிபொருட்களுக்கு மேலதிகமாக டிஜிற்றல் புகைப்படக் கருவி உள்ளிட்ட மேலும் சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 200 | 400 |
| தக்காளி | 100 | 120 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 40 | 60 |
| கோவா | 100 | 90 | 70 | 100 |
| கரட் | 100 | 120 | 110 | 140 |
| பூசணி | 60 | 30 | 40 | 50 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 130 | 150 | 110 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 130 | 150 | 160 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 180 | 160 | 140 | 160 |
| லீக்ஸ் | 160 | 140 | 110 | 160 |
| பீற்றூட் | 100 | 120 | 90 | 160 |
| கறிமிளகாய் | 250 | 150 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | — | 600 |
| போஞ்சி | 100 | 120 | 90 | 140 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 150 | 200 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 140 | 140 | 110 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 120 | 160 | 120 | 200 |
| முள்ளங்கி | 40 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 50 | 100 | 60 |

# அம்பாறையில் இராணுவத்தின் வசமிருந்த காணி விடுவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.எ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்றுக் காலை விஜயம் செய்துள்ளார்.

இதன்போது, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க ஆளுநரை வரவேற்றதுடன் தொடர்ந்து மாவட்ட செயலக எ.ஜ.விக்ரம அரங்கில் சந்திப்பும் இடம்பெற்றது.

அங்கு இராணுவத்தினரின் வசமிருந்த காணி விடுவிப்பு செய்யப்பட்ட பத்திரங்கள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவை அரசாங்க அதிப



ரிடம் ஆளுநரால் வழங்கப் பட்டுள்ளது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறும் அரச ஊழியர்கள் மீது நடவடிக்கை

## நீதியமைச்சர் தலதா எச்சரிக்கை



(இரத்தினபுரி)

தமது பொறுப்புகளை முறையாக நிறைவேற்றத் தவறும் அரச ஊழியர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள எச்சரித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் மினி தியவர வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

இந்தப் பகுதியில் கடமையாற்றும் அரசு ஊழியர்கள் குறித்து தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன.

அரச ஊழியர்கள் தமது கடமைகளை முறையாக நிறைவேற்ற வேண்டும்.

இந்நிலைமையைத் தவறும் பட்சத்தில் நாட்டில் உள்ள சட்ட திட்டங்களுக்கிணங்க அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நூல் நிலையத்தில் தீ வெலிகமவில் சம்பவம்



(கொழும்பு)

வெலிகம பிரதேசத்தில்நூல் நிலையமொன்றில் நேற்று முன்தினம் இரவு தீ பரவியுள்ளது. வெலிகம பொரால வீதியில் அமைந்துள்ள குறித்த நூல் நிலையத்தின் மேல் மாடியில் குறித்த தீ பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த தீயை பிரதேச வாசிகள் மற்றும் தீயணைப்பு பிரிவினர் இணைந்து அணைத்துள்ள நிலையில், தீபரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை. (இ-7)

# கொழும்பு - கட்டுநாயக்க தனியார் பேருந்துகள் பணிப்புறக்கணிப்பில்



(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து பணியாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தின் சாரதி ஒருவரை தாகிய சம்பவம் தொடர்பில், குறித்த பணியாளர் நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரியும் மகிந்தவும் இணைந்து ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிக்கட்டும்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கருத்து தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக கூறுகின்றனர். சிலர் கோத்தபாய ராஜபக்ஷவே வேட்பாளர் என்கின்றனர்.

இதனால், கட்சிக்குள் கருத்து முரண்பாடுகளே அதிகரிக்கின்றன. இந்நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எமது கூட்டணித் தலைவர்கள் தீர்மானிப்பார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள போதும் ஜனாதிபதி இதுவரை அது தொடர்பில் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை.

எந்த தேர்தல் நடந்தாலும் அதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன இணைந்த பாரிய கூட்டணி அமைத்துக் கொண்டே தேர்தலுக்கு முகம் கொடுக்க இருக்கின்றோம்.

ஆகையினால் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது எமக்குப் பிரச்சினையில்லை. எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பதே எமது சவாலாகும்.

கூட்டணி அமைத்து ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம்கொடுக்கும் போது தற்போதைய ஜனாதிபதியும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்கட்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# களனி கங்கையின் வெள்ளத்தை கட்டுப்படுத்த மணல்வேலி அமைப்பு

(கொழும்பு)

களனி கங்கையின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த மணல் வேலி அமைக்கப்படவுள்ளது. இதற்கென 24 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களனி கங்கையின் தெற்கு பிரதேசத்திற்கு நீரை வழங்கும் புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ்கம்பஹா மாவட்ட மக்களுக்கு தேவையான நீர்



விநியோகம் இடம்பெறும் என்றும், அம்பத்தல நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான முகாமையாளர் பியல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்கு புதிய நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் மற்றும் அடை மழை பெய்யும் வேளை களனி கங்கை பெருக்கெடுத்தால் களனிகங்கையை சூழவுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந் நிலையிலேயே இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (இ-7)

# குளவி கொட்டுக்கு இலக்காகி 80 மாணவர்கள் பாதிப்பு



(பதுளை)

எல்ல பல்லேகெட்டுவ சிங்கள மகா வித்தியாலய மாணவர்கள் 80 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் தெமோதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 5 பேர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் மைதானத்தில் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, அப்பகுதியிலிருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக்கூடே இவ்வாறு கலைந்து மாணவர்களைக் கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள், தரம் 1 தொடக்கம் 5 ஆம் தரம் வரையில் பயிலும் மாணவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் தெமோதர மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதி மேலதிக செயலாளர் (நிலையான அபிவிருத்தி) சந்ரரத்ன பல்லேகம ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு பெபரவரி மாதம் தொடக்கம் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த சந்ரரத்ன பல்லேகம சிவில் பாதுகாப்பு பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவராகவும் கடமையாற்றியிருந்தார்.

அத்துடன் 2013- 2015 ஆம் ஆண்டு வரை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமாகவும் பதவி வகித்திருந்தார்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட சந்ரரத்ன பல்லேகம நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

148



“அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலுமுள்ள அதிகாரிகள் செமினரிப் பட்டதாரிகளின் தகைமை, திறன் என்பனவற்றில் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். குடியேற்றச் செயலாளரும் லெப்டினன்ட் ஆள் பதியுமாகிய சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் (lieutenant James Emerson Tennent) பின் வருமாறு தன் அவதானிப்பைத் தெரிவிக்கின்றார். கற்கை நெறியானது பூரண மான ஒன்றாக இருந்ததனால் அது எட்டு ஆண்டு கள் நீடிக்கும் கல்வியாக இருந்தது”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

தமிழரின் நலன்களுக்கு மேலும் பங்களிக்கும் வகையில் அமெரிக்கன் சிலோன் மிஷன் மானிப்பாயில் ஒரு மருந்துக் கிளையையும் வைத்தியசாலையையும் நிறுவியதுடன் சுதேசிகளுக்கு மருத்துவக் கல்வியையும் வழங்கியது. யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்று இலங்கை முழுவதற்குமே இந்த மிஷன் இவ்விடயத்தில் முன்னோடியாக இருந்தது. பின்வரும் அத்தியாயங்களில் இந்த முக்கிய உண்மை விரிவாக ஆராயப்படும்.

வட்டுக்கோட்டை செமினரியை அமெரிக்கன் சிலோன் மிஷன் உருவாக்கிய போது தமிழ் இலக்கியத்தை வளர்த்தல், திடமான ஆங்கில அறிவைக் கற்பித்தல் என்பன அதன் இரு பிரதான நோக்கங்களாக இருந்தன.

நவீன அறிவை குறிப்பாக விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கு ஆங்கில மொழியைப் புரிந்துகொள்வது அத்தியாவசியம் என்பதை மிஷனரிமார் திடமாக நம்பினர். எனவே ஆங்கிலமே கல்வி நிறுவனங்களில் குறிப்பாக உயர்கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட்ட பாடங்களுள் அதி முக்கியமானதாக இருந்தது.

வட்டுக்கோட்டை செமினரி அதன் மேற்கத்தேய பாணிக் கற்பித்தலினாலும் உயர்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கியதாலும் ஆங்கில மொழியில் வகுப்புக்களை நடத்தியது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாடு முழுவதிலும் இது ஒன்றே இவ்வகையான கல்வி நிறுவனமாக இருந்தது.

அந்தக் காலகட்டத்தில் இந்த மிஷனரிமாரால் வழங்கப்பட்ட கல்வி யாழ்ப்பாணத் தமிழரை நாட்டில் அதிகம் கற்றவர்களாகவும் மிகுந்த திறன் மிக்கவர்களாகவுமாக்கி புலமை சார்ந்த தொழில்களிலும் பிரவேசிப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தி நாட்டிலே மற்றெவரையும் விட முன்னணியில் இருக்கும் நிலையை வழங்கியது.

அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலுமுள்ள அதிகாரிகள் செமினரிப் பட்டதாரிகளின் தகைமை, திறன் என்பனவற்றில் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். குடியேற்றச் செயலாளரும் லெப்டினன்ட் ஆள் பதியுமாகிய சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் (lieutenant James Emerson Tennent) பின் வருமாறு தன் அவதானிப்பைத் தெரிவிக்கின்றார்.

கற்கை நெறியானது பூரணமான ஒன்றாக இருந்ததனால் அது எட்டு ஆண்டுகள் நீடிக்கும் கல்வியாக இருந்தது. பிராமணிய முறையுடன் முரண்படும் அந்த மாணவரின் பயனையிட்டு விசேடமாகக் குறிப்பிடுவதுடன் பாடவிதானமானது வரலாற்றுச் சிறப்புக் கல்வியின் எல்லாக் கிளைகளுடனும் கணிதம், பௌதீகம், விஞ்ஞானம் என்பவற்றின் அதியுயர்ந்த கிளைகளுடனும் கிறிஸ்தவ மார்க்கத்தின் உயர்ந்த கொள்கைகள், சான்றுகள் என்பனவற்றுடனான மிக அந்நியோன்யமான புரிதலையும் கொண்டதாகவிருந்தது. மாணவர் வெளிப்படுத்திய அறிவு பிரமிப்பை ஏற்படுத்தியதுடன் கற்கைநெறி தொடர்பு முறையின் வெற்றி என்பவற்றைப் பொறுத்தவரையில் இக்கல்லூரி நிறுவனம் பல ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களின் தரத்துக்குச் சமமானது என்று சொல்வது எவ்வகையிலும் மிகையான கூற்றல்ல.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அவற்றின் கற்றல் நவீனமயமாக்கப்பட்டதே செமினரிக் கல்வியின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். செமினரியை நிறுவியவர்களின் கூற்றுக்கு இணங்க, தமிழ்மொழியானது சமஸ்கிருதம், ஹீப்றூ, கிரேக்கம் போன்ற மொழிகளை ஒத்தது என்பதுடன் அது சுயமூலம் கொண்டதும் நிறைவு பெற்றதுமான மொழியாக இருப்பதுடன் அதை அதற்காகவே விருத்தி செய்வது ஏற்புடையதாகும்.

ஆனால் இப்போது அநேகமாகக் கவனிப்பாரற்றுக் காணப்படும் தமிழ்க் கட்டுரையாக்கத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் தமது சொந்த மொழியான தமிழில் விவேகமாகவும் வலுவுடனும் எழுத வேண்டிய அவசியத்தின்மீது இவர்களது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அசல் சுதேச தமிழாக்கம், அதனுடைய அதியுயர்ந்த சாதுரிய நடை, மொழி மரபு என்பவற்றுக்காக வாசிக்கப்படுகையில் ஒரு அந்நியரின் ஆக்கமோ, மொழிபெயர்ப்போ அதற்கு ஈடாகாது என்பதனால் அவை புறந்தள்ளப்படும்.

சுதேச எழுத்தாளர்களின் தரத்தையுயர்த்த வேண்டும். விஞ்ஞான அறிவின் வளத்தைப் பெற்றுள்ள அவர்களுடைய மனங்கள், ஐரோப்பிய கருத்தியல்களுக்கு உருவம் கொடுப்பது மாத்திரமன்றி, அந்த வடிவங்களுக்கு அழகான சுதேச வடிவம் அமைக்கும் திறமையையும் இவர்கள் பெறவுங்கூடும் என்பது பிரதானப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்வது கற்றலுக்கும் கிறிஸ்தவத்திற்கும் நலன் தருவதாகும்.

பல்வகையான எழுத்தாக்கங்கள், இலக்கணம், ஒழுக்கவிதிச் சிறுநூல்கள் என்பன ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்க்கப்பட்டன. முதற் சில வருடங்களில் தமிழ்க்கல்வி மொழிபெயர்ப்புப் பயிற்சிகளை மட்டுமே கொண்டிருந்தது.

ஆயினும் பின்னர் தமிழ் ஆக்கங்களை ஆராய்வதற்கு வசதியளிக்கப்பட்டது. தமிழ் மொழியின் பேச்சு, இலக்கியம் என்பவற்றில் சிறந்த அறிவைப் பெற்றிருந்த சில மிஷனரிமார் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை மேலும் இரட்சிப்பவர்களாகி தமிழ் எழுத்தாக்கங்களுள் முக்கியமானவை சிலவற்றைப் பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்ளவும் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் தேவைகள் துரிதகதியில் நிறைவேற்றப்படும்-இராதாகிருஸ்ணன்



(கொழும்பு)

பொதுமக்களின் தேவைகள் குறுகிய காலத்தில் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் உறுதியளித்துள்ளார்.

விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள வே. இராதாகிருஷ்ணன் நேற்று வெள்ளிக்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாடு முழுவதிலுமுள்ள அபிவிருத்தி தேவையுடைய பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, பிரதேச அபிவிருத்திக்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (இ-4)

# குலதிஸ்ஸ கீகனகே பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

தெமடகொட கனியவள கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற குழப்பநிலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் குலதிஸ்ஸ கீகனகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் அவர் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது இந்தப் பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் மெய்ப்பாதுகாவலர் எதிர்வரும் மாதம் முதலாம் திகதி வரையில் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி தெமடகொட கனியவள கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற குழப்பநிலையின் போது அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# கைகொடுக்கும் நண்பர்களின் 'தை அரங்கம்'

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு கைகொடுக்கும் நண்பர்களின் "தை அரங்கம்'' நிகழ்வு நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில், பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெறும்.

இதில் தற்கொலை செய்ய எவருக்குமே உரிமை கிடையாது எனும் தலைப்பில் பட்டிமன்றம் மற்றும் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் நாடகமும் இடம்பெறும். (இ-5)

# ஆலயத்திற்கு அத்திபாரம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான்தெற்குஞான வைரவர் ஆலயத்தை புதுப் பொலிவுடன் அமைப்பதற்கான அத்திபாரம் இடும் நிகழ்வு நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறும். (இ-5)

## "அதிகார வெறிபிடித்த மகிந்த அணி"

# எமது ஆட்சியை எவரும் இனி கவிழ்க்க முடியாது

## அமைச்சர் சஜித் சூளுரை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினர் அரசியல் சூழ்ச்சியினூடாக அதிகாரத்தைக் கைப்பற்ற இரகசியத் திட்டம் வகுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும், சர்வாதிகாரப் போக்குடைய ராஜபக்ஷ அணியினர் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏற, தாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு ஊடகமொன்றிக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிகார வெறி, பதவி ஆசை பிடித்தவர்கள் ஜனநாயகத் தீர்ப்புக்கு முரணாக, குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க முயல்வதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த ஆட்சி, தடைகளைத் தகர்த்தெறிந்து தொடரும் என்றும், எமது ஆட்சியை எவரும் இனி மேல் கவிழ்க்க முடியாது என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

அத்தோடு நாடாளுமன்றத் தேர்தலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலோ எதுவாகவிருந்தாலும் அரசமைப்பு விதிமுறைகளுக்கமைய எதிர்கொள்ளத் தாம் தயாராகவுள்ளதாகவும் அனைத்துத் தேர்தல்களிலும் தாமே வெற்றிவாகை சூடுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.



மேலும், ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் சூழ்ச்சி போன்று மீண்டும் ஓர் அரசியல் சூழ்ச்சி அரங்கேறினால் நாட்டு மக்களே அணிதிரண்டு முறியடிப்பார்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# மத்தியஸ்த அமர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவிருந்த யாழ்.மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபை அமர்வுக்ள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை (20.01.2019) 9 மணிக்கு யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இடம்பெறும்.

எனவே யாழ்மாவட்ட விசேட மத்தியஸ்தர்களும் பிணக்குக்கு அழைக்கப்பட்ட 1ம், 2 ஆம் தரப்பினர்களும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தவறாது (20.01.2019) சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபை தலைவரும் அதிபருமான ரி.தேவதயாளன் அறிவித்துள்ளார். (இ

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1619

Search for people, places and things

கமலினி

மன்னித்துவிடு என்பது அன்பு, அதை அப்போதே மறந்துவிட்டேன் என்பது பாசம்



பிரியா

சிலருக்கு விளக்கம் கொடுப்பதைவிட அவர்களிடம் இருந்து விலகியிருப்பதே மேல்



லீலா

தான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் தன் பிள்ளைகளை கோபுரத்தில் வைத்திருப்பவள்தான் அம்மா



ராணி

எப்பொழுது நம்மை ஒருவருக்குப் பிடிக்கவில்லை என்று தெரியுதோ அப்பவே அவர்களை விட்டு விலகிடனும். கூடவே இருந்தால் அவமானம் மட்டும்தான் மிஞ்சும்



பாமதி

கோபத்தில் மொபைலை தூக்கி எறியும் போதுகூட சரியா பஞ்சு மெத்தை மேல எரியுறவங்ககிட்டத்தான் கத்துக்கனும் கோபத்திலும் நிதானமாய் இருப்பது எப்படின்னு



சுஜன்

நான் எதிலும் தோற்பதில்லை ஒன்று வெற்றி கொள்கிறேன், இல்லை கற்றுக்கொள்கிறேன்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2019 முதல் 12.02.2019 வரை

## மாற்றங்களால் ஏற்றம் உண்டு






**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

விளம்பி வருடம் தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி குருவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே தேவைக்கேற்ற பணம் தேடி வந்து கொண்டே இருக்கும். ஆவல்கள் அனைத்தும்நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் அதிகம் வாங்குவீர்கள். உடன் இருப்பவர்கள் உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள். நாடிவரும் வாய்ப்புகள் எல்லாம் நல்ல வாய்ப்புகளாக இருக்கும். நீதி, நியாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பீர்கள். நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறப் போகின்றது.

உங்கள் இராசிநாதன் சுக்கிரன் 2 ஆம் இடத்தில் குருவுடன் சேர்க்கை பெற்று இருப்பது நன்மை தான். நீங்கள் செய்ய நினைத்த காரியத்தை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திடீர், திடீரென வரும் திருப்பங்கள் நன்மை தருவதாகவே அமையும். பிள்ளைகள் வெளிநாட்டில் படிப்பது, தொழில் செய்வது தொடர்பானவற்றுக்கு முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாட்களாக இல்லத்தில் மங்கல ஓசை கேட்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் திருமண பேச்சுகள் கைகூடப் போகிறது.

சுக ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கிறார்கள். எனவே சில நேரங்களில் உடல் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படலாம். இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று மனம் குழம்ப வேண்டாம். எப்படி இருந்தாலும் மாதத்தின் மையப் பகுதியில் கொஞ்சம் மருத்துவச் செலவுகள் உண்டு. அது உங்களுக்காகவும் இருக்கலாம், உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்காகவும் இருக்கலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைத்து புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். 9இல் ராகுவும் 6இல் செவ்வாயும் இருப்பதால் வெளிநாடு சென்று பணிபுரிவதில் ஆர்வம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் செய்யும் பணியை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். எதிரிகளின் பலம் கொஞ்சம் குறையும். உடன்பிறப்புகளின் வழியிலும் பங்காளிகளின் வழியிலும் ஏற்பட்ட பகை மாற புது முயற்சி எடுப்பீர்கள். அதற்கு இனத்தாரின் ஆதரவும் இல்லத்தார்களின் ஆதரவும் கிடைக்கும். 4 இல் கேது இருப்பதால் விக்னேஸ்வரன் வழிபாடு உங்களுக்கு வெற்றியை அதிகரிக்கச் செய்யும்.

சங்கடஹர சதுர்த்தி அன்று விரதம் இருந்து, மங்கலம் தரும் விநாயகனை மனதில் நினைத்து அவல், பொரி கடலை நைவேத்தியம் செய்து வழிபட்டால் வளமான வாழ்க்கை அமையும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

ஜனவரி 30 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், வெற்றிகள் ஸ்தானத்திற்கு வரும்பொழுது கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து வைப்பீர்கள். குறிப்பிட்டபடி வளர்ச்சி ஏற்படும் என்றாலும் கூட, ஒரு சிலரை நம்பிச் செய்த காரியங்களில் இழப்பும் ஏற்படலாம். முன்னோக்கிச் செல்வதும், பின்னோக்கி வருவதும் வாடிக்கையாக இருக்கும் இந்த நேரத்தில், நிலையான வருமானம் அமையாது. ராகுகேதுக்களுக்குரிய சிறப்புப் பரிகாரங்களை நீங்கள் செய்வதன் மூலமும், சுக்கிர பகவானுக்குரிய ஸ்தல வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமும் இக்காலத்தில் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

மேஷ செவ்வாய் சஞ்சாரம்

பெப்ரவரி முதல் திகதி தன சப்தமாதிபதியான செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். வரன்கள் நல்ல முடிவிற்கு வரும். திருமணத் தடை அகலும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வெளிநாடு சென்று பணிபுரிய எடுத்த முயற்சி வெற்றி தரும். விலகிச் சென்ற குடும்ப உறுப்பினர்கள் விரும்பி வந்திணைவர். கலகலப்பாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தினர்களின் குறைகளைத் தீர்க்க முன் வருவீர்கள். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி, வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சிகளில் இருந்த தடை அகலும்.

கும்ப புதன் சஞ்சாரம்

இதுவரை 4ஆம் இடத்தில் அஸ்தமத்துடன் இருந்த புதன், ஜனவரி 28 ஆம் திகதி நிவர்த்தியாகி பெப்ரவரி முதல் திகதி உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான புத்திர ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கிறார். இக்காலம் ஓர் இனிய காலமாகும். மாமன், மைத்துனர்களின் மனக்கலக்கம் அகல வழிசெய்வீர்கள். தொழில் தொடங்க நினைக்கும் பிள்ளைகளுக்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பீர்கள். வேலைக்குச் செல்ல நினைப்பவர்களுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்கும். தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு வேலை நிரந்தரமாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். நண்பர்களுக்கு கைமாற்றாக கொடுத்த தொகை வந்து சேரும். இக் காலத்தில் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.


இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதம் இது. வருமானத்திற்கு குறைவிருக்காது. ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை வந்து சேரும். மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும். பயணங்களில் பலன், தொழில் முன்னேற்றம், உறவினர்களின் ஒத்துழைப்பு போன்றவை கிடைக்கும். திட்டமிட்டபடி காரியங்களை நிறைவேற்றுவீர்கள். கணவன் -மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். கருத்து வேறுபாடுகள் குறையும். பிள்ளைகள் குடும்பப் பொறுப்புடன் நடந்து கொள்வர். நாட்பட்ட நோய் அகலும். பெற்றோர்களின் மனக்கசப்பு மாறும். உத்தியோகத்தில் பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்துசேரும். வெள்ளி தோறும் விரதமிருந்து வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டுவருவது நல்லது.

## வெற்றிக்கொடி பறக்கும் நேரம்






விளம்பி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே குருவும், சுக்கிரனும் இணைந்திருக்கிறார்கள். குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகின்றது. தன பஞ்சமாதிபதியான குரு ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, பண வரவு திருப்திகரமாகவே இருக்கும். மிதமிஞ்சிய பொருளாதார நிலை உருவாகும். தொழில் வளர்ச்சி கூடும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அசுர குருவும், தேவ குருவும் இணைந்திருப்பதால் திடீர், திடீரென நல்ல திருப்பங்கள் வந்துகொண்டே இருக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களைத் தருவர். பூமி வாங்கும் யோகம், வாகனம் வாங்கும் யோகம் போன்றவை வரிசையாகச் செயற்படும்.

ஏழரைச் சனியின் குடும்பச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெறுகின்றது. எனவே குடும்பச் சுமை கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கும். எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. மதிப்பும், மரியாதையும் உயரும். மங்கல காரியங்கள் சிறப்பாக நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நிலையான வருமானம் வருவதற்கான வழி பிறக்கும். தங்கம், வெள்ளி மற்றும் நவரத்தினங்கள் வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். உறவினர்களின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்துவதில் முக்கிய அங்கம் வகிப்பீர்கள். கண்நோய் அகலும். உடல்நலம் சீராகும். பரந்த மனப்பான்மை கொண்ட நண்பர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். முன்னோர் வழிபாட்டையும், குலதெய்வ வழிபாட்டையும் முறையாக மேற்கொண்டால் மற்றவர்களின் கண்ணேறு ஏற்படாது. கடமையில் தொய்வும் வராது. முன்னேற்றப் பாதையில் நீங்கள் அடியெடுத்து வைக்க முக்கிய காரணமாக இருப்பது வழிபாடுகள் தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பொதுவாக மாதத் தொடக்கத்தில் குருமங்கள யோகமும், புதஆதித்ய யோகமும் செயற்படுகின்றது. எனவே கல்விக்காக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். மேற்படிப்பு படிக்கவோ, அல்லது படித்து முடித்து வெளிநாடு சென்று பணிபுரியவோ நினைத்தவர்களுக்கு அது கைகூடும். பத்திரப் பதிவில் இருந்த தாமதங்கள் விலகும். வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிதாக சொத்து வாங்கும் எண்ணம் உருவாகும்.

உங்கள் இராசிக்கு அதிபதி பூமிகாரகனான செவ்வாய் என்பதால், நிறையச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. செவ்வாய் பலம்பெற பூமிநாத சுவாமி வழிபாடு நல்லது. சகாய ஸ்தானத்து கேது, ஒன்பதாமிடத்து ராகு ஆகிய 2 கிரகங்களாலும் இனிய பலன்கள் கிடைக்க யோகபலம் பெற்றநாளில் சர்ப்பசாந்திப் பரிகாரங்களைச் செய்துகொள்ளுங்கள்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

ஜனவரி 30ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்திற்குச் செல்லும் சுக்கிரன் வசதி, வாய்ப் புகள் பெருக வழிவகுத்துக் கொடுப்பார். 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் என்பதால், வாழ்க்கைத் துணை வழியே நன்மைகள் கிடைக்கும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வியாபார தொடர்புகள் அதிகரிக்கும். கிளைத் தொழில் தொடங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். சம்பள உயர்வு, பதவி உயர்வு தலைமைப் பொறுப்புகள், எதிர்பார்த்த சலுகைகள் போன்ற அனைத்தும் கிடைக்கும் மாதம் இது. தீர்த்த யாத்திரை திட்டமிட்டபடியே வெளிமாநிலம், வெளியூர்ப்பயணங்கள் ஏற்படும். பொதுவாக தேக்க நிலை மாறித் தெளிவு பிறக்கும் நேரம் இது.

மேஷ செவ்வாய் சஞ்சாரம்

பெப்ரவரி முதல் திகதி உங்கள் இராசிநாதன் செவ்வாய் ஜீவன ஸ்தானம் எனப்படும் 6 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். இது ஒரு பொற்காலமாக மாறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தொட்டது துலங்கும். தோழர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிச் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கும். வீடு வாங்க வேண்டும் அல்லது வீட்டை விரிவு செய்து கட்ட வேண்டும், கட்டிய வீட்டைப் பழுது பார்க்க வேண்டும் என்று எதிர்பார்ப்புடன் இருந்தவர்களுக்கு அவையெல்லாம் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

கும்ப புதன் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் புதன் அஸ்தமனத்தில் மகரத்தில் சஞ்சரிக்கிறார். ஜனவரி 28 ஆம் திகதி அஸ்தமன நிவர்த்தியாகிப் பலம் பெறுகிறார். பெப்ரவரி முதல் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியானவர் புதன். அவர் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நாடு மாற்றம், வீடு மாற்றம் தானாக வந்து சேரும். வரும் மாற்றங்கள் வளர்ச்சிக்குரிய மாற்றங்களாக அமையும். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். கலைத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், அதிகாரப் பதவியில் உள்ளவர்களுக்கும், நீங்கள் அனுகூலமாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பீர்கள். தொழிலில் பல முதலீடுகளைச் செய்ய முன்வருவீர்கள். தாய் வழி ஆதரவு உண்டு. உடன் இருப்பவர்கள் உங்களுக்கு கூடுதல் நன்மையை வரவழைத்துக் கொடுப்பர். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். சுபச் செலவுகளால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

இம்மாதம் குடும்பச் சனிக்குப் பரிகாரமாக சனி கவசம் பாடி சனிக்கிழமை தோறும் சனீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும். குடும்பப் பெரியவர்களின் அன்புக்கு பாத்திரமாவீர்கள். இதுவரை உங்கள் மீது குற்றம் குறை சொல்லி வந்தவர்கள் இப்பொழுது தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தேக நலன் சீராகும். கணவன் -மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும், உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்குவது பற்றியோ, தொழில் தொடங்குவது பற்றியோ நல்ல முடிவெடுப்பீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். வேலை, மாலை, படிப்பு போன்ற காரியங்களில் நீங்கள் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். தாய்வழித் தனவரவும், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு புதிய பொறுப்புகள் தேடிவரும். பிரதோஷ காலத்தில் நந்தியம் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–165

# காலநிலை மாற்றத்தினை அனுசரித்து உலக பஞ்சத்திலிருந்து விடுபட...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!


இவ்வருட ஆரம்பத்திலேயே பல மாற்றங்கள் எம் முன்னே நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான மாற்றங்களில் நிச்சயமாக இவ்வருடத்திற்கான நல்வாழ்வுக்கான செய்திகளும் நிச்சயமாகவரும். இடர்கள் களைந்துநம்பிக்கையையும் திடமான எதிர்கால திட்டமிடலையும் இவ்வருடம் ஏற்படுத்திக் கொடுக்கும் என நிச்சயமாக நம்பலாம்.

2018 வருடம்முடியும்போது மழை கொட்டித்தீர்த்து வெள்ளக்காடாகியிருந்த கிளிநொச்சி மாவட்டம் தற்போது பழைய நிலைமைக்குத் திரும்பினாலும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் விரைந்து சென்றடைய வேண்டும் என்பதும் எமது தேசத்தின் பல இடங்களிலிருந்தும் மக்கள் அனைவரும் சேர்ந்து அவர்களுக்கான நிவாரணப் பொருட்களை கொடுத்துதவியதையும் மனிதாபிமானம் இன்னமும் இம் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு அடையாளமாகவும்காணலாம். மழை பெய்வது வழக்கமான காலமென்றாலும் திடீரென கொட்டித்தீர்த்தது என்னவோ வழமைக்கு மாறாகவே இருக்கின்றது. திடீரென அடித்துக் கொட்டிய மழையினால் சேர்ந்த வெள்ளம் கரைபுரண்டோடி பலவிடங்களில் குடிமனைகளை அள்ளியெடுத்துச் சென்றிருக்கின்றது. இவ்வாறான இயற்கையின் சீற்றத்தை நாம் எதிர்வு கொள்ளத் தயாராகியிருக்க வேண்டும் என்பதற்கப்பால் வருமுன் காத்தல் சிறந்தது என்பதில் நாம் முழுமையாக கவனம் செலுத்தவில்லை என்பதே இவ்வாறான இயற்கை அனர்த்தங்களுக்கு காரணமாக அமைந்து விடுகின்றது.

இவ்வாறாக காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நாம் அவ்வப்போது உணரத்தொடங்கினாலும் இதனது முழுமையான தாக்கம் ஆபிரிக்க தேசத்தில் பாரதூரமானதாக காணப்படுவதனாலும் அங்கே தொடர்ச்சியான வரட்சி இருப்பதனால் பயிர்கள் எதுவுமின்றி பஞ்சம் தலைவிரித்தாடும் செய்திகள் தினந்தினம் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் குழந்தைகள்,பெண்கள்,கர்ப்பிணிப் பெண்கள்,வயதானவர் என பலரும் இறக்கின்ற அவலநிலை ஏற்பட்டிருப்பதுடன் இதனது தாக்கம் மேலும் அதிகரித்துச் செல்லும் நிலைமையே தொடர்ந்தும் காணப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எமது தேசத்திலும் வரட்சியின் தாக்கம் குறிப்பிட்ட சில வருடங்களில் மாறிமாறி ஏற்பட்டிருப்பதனையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. எது இருப்பினும் இவ்வாறான காலநிலை மாற்றத்தினால் பயிர்ச்செய்கை அழிவடைவதும் அதனால் உணவுற்பத்தி பாதிக்கப்படுவதும் மாறி மாறி நடைபெறும் நிகழ்வுகளாயினும் நாம் எமக்கு கிடைக்கும் உணவினை விரயமாக்காது முழுமையாகப் பயன்படுத்தினால் ஓரளவிற்கு பஞ்சம் ஏற்படுவதிலிருந்து எம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

இவையனைத்தையும் கவனத்திற்கொண்டு உலக உணவு தாபனம் பின்வரும் அறிவுறுத்தல்களை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வறிவுறுத்தல்களை நாமும் கடைப்பிடித்தால் எமது தேசத்தில் ஏற்படப்போகும் பஞ்சத்திலிருந்து எமது மக்களைக் காப்பாற்றும் செயலில் நாமும் இணைந்து கொள்ளலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 179



1.ஏற்ற உணவினை தெரிந்தெடுத்து உண்ணல்

இதனைக் கூறும்போதே இதிலென்ன இருக்கின்றது என்னும் மனப்பாங்கு எழுவது இயற்கையே. சமமான சுகாதாரமான பாரம்பரிய உணவுகளுடன் ஒன்றிணைந்த அவரைப்பயிர்கள், தானியங்கள் என்பனவற்றை எங்களூரில் உற்பத்தியாவதை உண்ணப்பழகிக் கொள்ளவேண்டும். இதன்மூலம் அதிகரித்த விளைச்சல், அனைவருக்குமான உணவைத்தேடுதல் என்பதில் இலகு நிலை ஏற்படும். எங்கள் மண்ணில் இலகுவாக விளையும் அவரைப்பயிர்கள் பல இருக்கின்றன. அவற்றைத் தெரிந்தெடுத்து உற்பத்தி செய்தால் செலவும் குறைவு, பீடைப்பிரச்சினைகளும் இல்லை. மேலும் அவற்றை உற்பத்தி செய்தல் மட்டுமின்றி சேமித்து வைத்தலும் இலகுவாகிவிடும். மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி எமது உணவுகளைத் தயாரித்து உண்ண அறிவுரை கூறுதல் நன்று. கிழமையொன்றில் ஒரு வேளை இறைச்சியை உண்பதனைவிட மரக்கறிப் பயிர்களை உண்பதனால் மாமிசத்தை உற்பத்தி செய்வதற்கான செலவினத்திலிருந்தும் அவற்றுக்காக நாம் பயன்படுத்தும் உள்ளீடுகளிலிருந்தும் விலக்கு கிடைத்துவிடும். அத்துடன் இறைச்சியை உற்பத்தி செய்வதற்காக கால்நடைகளுக்கு போடப்படும் தீனி, அதற்காக உற்பத்தி செய்யப்படும் தீவனப் பயிர்களுக்கான செலவினம் மற்றும் அவற்றை பதனிடுவதில் செலவழிக்கப்படும் பணம் என்பனவும் மீதமாகும். மரக்கறிப் பயிர்களிலும் விலை கூடிய உள்ளீடு தேவைப்படும் பயிர்களைத் தவிர்த்து பாரம்பரியமாக உள்ளூரில் வளரும் பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படாத பயிர்களை தெரிந்தெடுத்து வளர்த்தால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் கண்டுவிடலாம். இதற்கு எமது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த உள்ளூர் பயிரினங்களை வளர்த்து உணவாக்கலாம். ஆக மொத்தத்தில் உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்படல் வேண்டும்.

2.உணவினை வீணாக்குவதைக் குறையுங்கள்

ஒவ்வொரு வருடமும் நாம் உற்பத்தி செய்வதிலிருந்து மூன்றிலொரு பகுதி விரயமாக்கப்படுகின்றது. இவ்வாறு உற்பத்தியாகும் உணவினை நாம் முழுமையாக பயன்படுத்த முடியுமாயின் அதன் மூலம் செலவிடப்படும் கூலி, நீர்த்தேவை மற்றும் போக்குவரத்துக்கான செலவு என்பன மீதமாகும் அல்லவா. சந்தையில் பொருட்களை வாங்கும் போது தேவையானவற்றை மட்டும் வாங்கும் போதுசெலவினமும் கட்டுக்குள் இருக்கும். அதுபோல விரயமும் தவிர்க்கப்படும். நாம் அனைவரும் உற்பத்தியாகும் உணவினை விரயப்படுத்தாமல் சமைத்தெடுக்கும் உணவினை அளவாக செய்யும் போது இவ்வாறான விரயத்தை இயன்றவரை நாம் தவிர்த்திடல் முடியும். தேவைக்கேற்ப உணவு சமைத்து பயன்படுத்துவது என்றுமே நல்லது. உணவு ஒரு பக்கத்தில் விரயமாக்கப்பட்டுக் கொண்டிருந்தால் எவ்வளவு தான் உற்பத்தியை அதிகரித்தாலும் கைக்குவந்து சேர்வது குறைவாகவே இருக்கும். உற்பத்தியான பொருளை சரியாக களஞ்சியப்படுத்தி அவற்றை உண்ணும் போது தேவைக்களவானதை பயன்படுத்தும் போது அனைவருக்கும் உணவினை கிடைக்கச் செய்யவும் முடியும். இதனைக் கருத்தில் கொண்டு உணவினை விரயம் செய்வதனை இயன்றவரை தவிருங்கள். அதேபோல இதனை மற்றையவர்களும் புரிந்து கொள்ளவும் விரயமாக்காமல் உணவினைப் பயன்படுத்தவும் அறிவுரை கூறுங்கள். உணவினை பாதுகாக்க அனைவருக்கும் பணி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது எனலாம்.

3.நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

நீரைசிக்கனமாக பயன்படுத்துவதால் அதற்கான மதிப்பை நாம் கூட்டுவதுடன் அதனை அளவாக தேவைக்கேற்ப பயன்படுத்த முயற்சி செய்வோம். நீரை தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொண்டு அதிகமாக பயன்படுத்துவதனை தவிர்த்து விரயத்தையும் கட்டுப்படுத்திக்கொள்ளலாம். நீரின் தேவைபற்றி எமக்கு புரிந்து கொள்ள அதிக நேரம் எடுக்காது. அதேவேளை தேவையான நீரையும் இவ்வாறான நீர்தேங்கு நிலைகளிலிருந்து பெறுவதனால் அவற்றின் சுகாதார தன்மையையும்கவனத்திற்கெடுக்க வேண்டும். நீரின்றி இவ்வுலகமேது என்பதற்கிணங்க நீர்த்தேவையை உணர்ந்து அதனை சிக்கனமாக பயன்படுத்த் முயற்சி செய்தல் நல்லது.

4.எமது மண்ணையும் நீரையும் சுத்தமானதாக வைத்திருத்தல்

சுத்தம் என்பது அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானதாகும். அந்தவகையில் உள்ளே கொண்டு வரப்படும் மண் மற்றும் உள்ளீடுகளினால் சுத்தம் பாதிக்கப்படும். மண்ணையும் நீரையும் சுத்தமாக வைத்திருக்க பழக்கவேண்டும். மாணவர்களுக்கு தரப்படும் அறிவுரைகள்அவர்களது வாழ்க்கையை செப்பனிட்டு சிறப்பாக வாழ வழிவகுக்கின்றன. அந்த வகையில் எமது மண்ணையும் நீரையும் இயன்றவரையில் சுத்தமானதாக வைத்திருப்பதற்கான வழிகளில் ஈடுபடல் வேண்டும்.

5.உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் வேண்டும்

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிவகைகளை இனங்காணலாம். உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கும் போதுதான் தேசத்தின் உற்பத்தி தேவை பூர்த்தி செய்யப்படும். அந்தவகையில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான தேவைகளை நிறைவு செய்யும் போது அவர்களினால் உற்பத்தியாகும் பொருட்களின் தரமும் அதிகரிக்கும். இதற்கான திட்டங்களை உருவாக்கி அவர்களுக்கான ஊக்குவிப்பை பயிற்சி வகுப்புக்கள் மற்றும் தரமான உள்ளீடுகளின் மூலமும் அவர்களது பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி இன்னும் பயிர்ச்செய்கையில் உள்வாங்கிக்கொள்ளலாம்.

எமது உணவுத்தேவையை நாம் இனங்கண்டு அதற்கான அனைத்து முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டால் உணவினை பாதுகாப்பினை உறுதி செய்வதோடு பஞ்சம்,பட்டினி என்பன ஏற்படாமல் தடுக்கவும் வழி செய்ய முடியும். இவ்வாறான விடயங்களில் நாம் கரிசனை கொள்வது மிகவும் முக்கியமானதாகும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படல் வேண்டும். தேசத்தின் ஒரு மூலையில் மட்டும் இதனைக் கடைப்பிடிப்பதனால் எதுவும் நடந்திடாது. அனைவரையும் இச்செயற்பாடுகளுக்குள் உள்வாங்கிக்கொண்டால் நிச்சமாக உணவுப் பாதுகாப்பினை நாம் ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை இல்லாத வீட்டில் எலிகள் சன்னதம் ஆடும்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆட்சியாளர்களுடன் இணைந்து செல்வதும் சாத்தியமாகாதென உணர்ந்தோம்

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்கக் கூடாது என்ற கோசங்கள் தென்பகுதியில் பரவலாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்ற முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதை அடுத்து தென்பகுதிப் பேரினவாத சக்திகள் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிராக கோசம் எழுப்பத் தொடங்கியுள்ளன.

இதில் பௌத்த பீடங்களும் இணைந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகளும் விடப்பட்டுள்ளன.

மிகப்பெரியதொரு யுத்தத்தை நடத்தி தமிழ் மக்களைக் கொன்றொழித்த பின்பும் சிங்களப் பேரினவாதத்தின் இனவாதப் பசி அடங்கவில்லை என்பது தெரிகிறது.

ஆக, சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்து சென்று தமிழர்கள் தங்கள் உரிமையைப் பெற முடியுமென்று யார் நினைத்தாலும் அந்தச் சிந்தனை ஒருபோதும் சரிவர மாட்டாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் இப்போதாவது ஏற்றுக் கொள்வர் என நம்பலாம்.

அதாவது இலங்கையின் ஆட்சி அதிகாரம் என்பது நாட்டின் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றிடையே மாறி மாறி வருவதான இயல்பைக் கொண்டுள்ளது.

ஆட்சிப் பீடத்தில் அமர்வதற்காக கூட்டணிகளை அமைத்துக் கொண்டாலும் இரு பிரதான கட்சிகள் அடங்கிய எதிரும் புதிருமான ஆட்சியில் ஒன்றின் தீர்மானத்தை மற்றையது எதிர்ப்பது இலங்கையில் தவிர்க்க முடியாத இயல்பாகிவிட்டது.

அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசு முற்பட்டால், அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கும்.

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்தால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக மறுக்கும்.

இதுவே இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்பான நடைமுறை.

எனவேதான் இணக்க அரசியல் என்ற கோட்பாடு நடைமுறைச் சாத்தியமற்றதெனக் கூறவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டுமாக இருந்தால், தேசிய அரசு அமையும் பட்சத்திலேயே அது சாத்தியமாகும் என அரசியல் நோக்கர்கள் கருத்துரைத்தனர்.

அவர்களின் கருத்துக் கணிப்பு சரியாகுமா? என்பதைப் பரீட்சிப்பதுபோல தேசிய அரசு உருவாகியது. ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து கொண்டனர்.

இணைந்து செல்வதென கூட்டணி அமைத்துக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேசிய அரசை அமைத்தது.

தேசிய அரசு அமைத்தமை அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்க உதவும் என எதிர்பார்த்தபோது, நடந்தது என்ன? என்பதை அண்ட சராசரம் முழுவதும் அறியும்.

**நிலைமை இதுவாக இருக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாக வேண்டுமாயின் தமிழர்கள் எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன என்பதை இனிமேலாவது தமிழினம் ஒன்றுகூடி முடிவெடுக்க வேண்டும்.**

# தயாரிக்கப்படாத அரசியலமைப்புக்காக ஒருசிலர் அரசாங்கத்தை தாக்குகின்றனர்

## ஐ.தே.க.பொதுச் செயலாளர் காரியவசம் கவலை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புக்கான வரைபு இதுவரை முன்வைக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

குளியாப்பிட்டி மேற்கு பிரதேசத்துக்கான நிலசெவன அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இதுவரை தயாரிக்கப்படாத அரசியலமைப்பு தொடர்பாக இல்லாத ஒன்றைக் கூறியும் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக கூறியும் ஒருசிலர் அரசாங்கத்தை தாக்கிப் பேசுகின்றனர்.

எனினும் புதிய அரசியலமைப்புக்கான வரைபு கூட இதுவரை முன்வைக்கப்படவில்லை.

நிபுணர்களினதும் கட்சிகளின் நிலைப்பாடுகளுமே இதுவரை முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு முன்னர் பௌத்த மகா பீடங்களின் அனுமதியை பெற்றுக் கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

### ஜனநாயகம் பற்றிக் கருத்துரைக்க

## ரணில்- அநுர- சம்பந்தன் ஆகியோருக்கு எந்தத் தகுதியுமில்லை-கெஹலிய காட்டம்

(கொழும்பு)

ஜனநாயகம் பற்றி கருத்துரைக்கும் எவ்வித தகுதிகளும் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் ஆகிய தரப்பினர்களுக்கு கிடையாது.

தனிமனித அடிப்படை உரிமைகளில் ஒன்றான தேர்தல் உரிமையை இம்மூன்று தரப்பினரும் தமது சுய தேவைக்காக பிற்போடுவது பாரிய ஜனநாயக மீறல் செயறபாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சி அமைப்பினராக செயற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகளில் காணப்படுகின்ற ஒரு சில குறைபாடுகளை சுட்டிக் காட்டி ஜனநாயகம் தொடர்பில் தொடர்ந்து பொய்யான பிரசாரங்களை மாத்திரமே முன்னெடுத்தனர்.

இவ்விரு கட்சிகளும் எதிர்க்கட்சி பதவியில் இருந்து கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் பங்காளிக் கட்சியினராகவே செயற்பட்டனர்.

இவர்களின் செயற்பாடு ஒருபோதும் ஜனநாயகத்தை பாதுகாப்பதாக காணப்படவில்லை.

மாறாக உண்மையான ஜனநாயக கொள்கைகளுக்கு முரணாகவே காணப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## தமிழ் பேச்சுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு இன்று அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற இருந்த அனைத்து பிரிவுகளுக்குமான தமிழ்ப் பேச்சு போட்டி பாடசாலை நாள் என்பதால் எதிர்வரும் 2019.01.27 காலை 10 மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறும். நாளை 20.01.2019 நடத்த திட்டமிடபபட்டு இருந்த பேச்சு ஆங்கிலம் (English speech), Recitation வழமைபோல் நாளை காலை 10 மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறும் என கலை செயலாளர் மு.பிரதீபன் அறிவித்தார். (ம-9)

## தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு கூட்டம் நாளை

தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணி செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடைய வாசஸ்தலத்தில் நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பத்திரிகையாளர் சந்திப்பும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-9)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி,கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாகவிகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2ம் 3ம் 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ்கம்பனி ஸ்ரான்லி வீதி, **AVNOR** பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் புகையிரத நிலையம், **Green Grass** விடுதி, சிறி நதியா நகைமாளிகை, **Raja Talkies, LOLC,** ஞானம்ஸ் விடுதி,ரொப்பாஸ், குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, பாசையூர், கொழும்புத்துறை வீதியின் ஒரு பகுதி, இலந்தைக் குளம் வீதி, புங்கங்குளம் வீதி, சந்தன மாதா கோவில் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன் தோட்டம், பெரிய தோட்டம், உதயபுரம், குருசோ வீதி,அச்சுக்கூட வீதி,பிரதானவீதியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** மதவுவைத்தகுளம், தவசிகுளம், பண்டாரிக்குளம், உக்குளாங்குளம், குட்செட் றோட்,லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** நானாட்டான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பிறர் எவ்வளவு தீயவரானாலும் நீங்கள் அவருக்கு கேடு நினைக்காதீர்கள். அதனால், உங்களுக்கு நீங்களே கேடு செய்தவராவீர்கள்.
- எந்த வேலையையும் தன் விருப்பத்திற்குஏற்ப மாற்றுபவரே அறிவாளி. அவரால் எந்தப் பணியிலும் மகிழ்ச்சியோடு ஈடுபட முடியும்.
- ஒருநாள் மனிதன் இறப்பது உறுதி. அதற்குள் ஒரு பெரிய குறிக்கோளை ஏற்றுக் கொண்டு அதற்காக பாடுபட்டு அடைய முயற்சிப்பது நல்லது.
- மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டு இருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.
- முதலில் வேலையாளாக பணியாற்றக் கற்றுக் கொள்ளுங்கள். பின்னர் தானே எஜமானராகும் தகுதி வந்து சேரும்.
- ஒருவரிடத்திலும் பொறாமைப்படாதீர்கள். நன்மை செய்வோர் ஒவ்வொருவருக்கும் கைகொடுக்கத் தயாராய் இருங்கள்.
- துன்பமற்ற இன்பத்தையோ, இன்பமற்ற துன்பத்தையோ உலகில் ஒருவராலும் பெற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தருணத்தில் பெனால்டியை வீணடித்த பற்றிக்ஸ் சம்பியனாகிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி







யாழ்.மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளின் 19 வயது கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், பலமிக்க சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினை வீழ்த்தி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த 15 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முதற்பாதியாட்டத்தில் சாந்தனின் கோலுடன் சென்.பற்றிக்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில், யாழ்ப்பாணம் மத்திக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பொன்றை றேம்சன் கோலாக்கினார். தொடர்ந்து, மத்தியின் விக்னேஸ் கோல் ஒன்றைப் பதிவு செய்தார்.

போட்டி முடிவடையும் தருணத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு, பெனால்டி வாய்ப்பொன்று கிடைக்கப்பெற்றது. எனினும், அதனை சாந்தன் கோலாக்கத் தவறி கோல் கம்பத்துக்கு மேலால் அடிக்க, சென்.பற்றிக்ஸ் அணியின் தோல்வி உறுதியானது.

முடிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஜூட்டிலக்சன் தொடர் நாயகனாகவும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் டிலக்சன் சிறந்த கோல் காப்பாளராகவும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் றேம்சன் இறுதிப்போட்டியின் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

# சாவகச்சேரி நகரசபை வெற்றிக்கிண்ணம் கைதடி ஐக்கியம் விளையாட்டுக்கழகம் சம்பியன்

சாவகச்சேரி நகரசபையினரின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் கைதடி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் எட்டு விக்கெட்டுக்களால் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

16அணிகள் கலந்துகொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம் மற்றும் கைதடி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் ஆகியன முன்னேறி இருந்தன. இறுதிப்போட்டி தைப் பொங்கல் தினத்தன்று மாலை சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

15பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட குறித்த போட்டியில் நாணயச் சுழற்சியில் சிவன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

சிவன் விளையாட்டுக்கழக அணி 11.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் சிவன் அணி சார்பாக ஜெசி 9 ஓட்டங்களையும், துவாரகன்10 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர். ஐந்து வீரர்கள் ஓட்டமெதனையும் பெற்றுக் கொள்ளாமல் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஐக்கியம் அணி சார்பாக சிவநீதன் மூன்று இலக்குகளை கைப்பற்றியிருந்தார். 41 என்ற இலகு ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கியம் விளையாட்டுக் கழகம் 7.4 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து








வெற்றி இலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஐக்கியம் அணி சார்பாக டினோஜ் 30 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் சிவன் சார்பாக மலிங்க,லது ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றி இருந்தனர்.

சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் பாலமயூரன் தலைமையில் இடம்பெற்ற இப் போட்டியில் விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை, நகரசபை செயலாளர் சண்முகதாசன்,லக்சுமி இரும்பக உரிமையாளர் பாக்கியநாதன், அம்பிகா மருந்தக உரிமையாளர் சிவபாலன், தொழிலதிபர் ஜெயந்தன், தொழிலதிபர் சற்குணராசா, சாவகச்சேரி அஞ்சல் அதிபர், சாவகச்சேரி நகரசபை கணக்காளர் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். முதலாம் இடத்தைப் பெற்ற ஐக்கியம் விளையாட்டுக் கழகத்திற்கு 25,000 பணப்பரிசில் மற்றும் வெற்றிக்கோப்பையும் நகரசபைத் தவிசாளரால் வழங்கி வைக்கப் பட்டது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தின் டினோஜ் , சிறந்த பந்து வீச்சாளராக ஐக்கியம் அணியின் சிவநீதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-30)







கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற தேசிய பளுதூக்கும் போட்டியில் இளவாலை கன்னியர் மடம் பாடசாலை மாணவிகள் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்கள். 76 கிலோ பிரிவில் ஜே. டிலுஷா தங்கப்பதக்கத்தையும் 64 கிலோ பிரிவில் வி. றிகோன்சிகா வெண்கலப் பதக்கத்தையும் 40 கிலோப் பிரிவில் எம்.மகிலினி பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (க)

# தைத்திருநாளை முன்னிட்டு நொதேன் வி.க. நடத்தும் மரதன் ஓட்டப் போட்டி

தைத்திருநாளை முன்னிட்டு நல்லூர் நொதேண் விளை யாட்டுக் கழகம் நடத்தும் மரதன் ஓட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

மேற்படி மரதன் ஓட்டப் போட்டியானது எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 19.01. 2019 நண்பகல் 12 மணிக்கு முன்னதாக தங்களது பெயர்களை பதிவு செய்வதுடன் 20.01.2019 காலை 5.30 மணிக்கு முன்பாக மருத்துவ சான்றிதழுடன் கல்வியங்காட்டுச்சந்திக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 076 827 3570, 075 0410487 என்ற தொலைபேசி இலக்கத்தை அணுகவும். (ம)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை எதிர்...

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி பல காரணங்களைக் காரணம் காட்டி தேர்தல்களைப் பிற்போடுவதற்கு முயற்சி செய்து வருகின்றது. இது தேர்தல் தொடர்பாக அக்கட்சிக்கு எழுந்துள்ள தோல்விப் பயமே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் இவ்வாறு செயற்படுமாக இருந்தால் நாம் இது தொடர்பாக முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பிரச்சினை இருக்கிறது. எமக்கும் இந்த விடயத்தில் பிரச்சினையொன்று இருக்கின்றது.

ஒவ்வொரு தரப்பினரும், ஒவ்வொருவரின் பெயரை ஜனாதிபதி வேட்பாளராகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றவகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத்தான் களமிறக்க வேண்டும் என்றுத் தீர்மானித்திருக்கிறோம்.

கோத்தபாய ராஜபக்ஷ, மக்கள் தயார் என்றால் தானும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயார் என்று கூறியுள்ளார். நானும், அவ்வாறே கூறுகிறேன். ஜனாதிபதித் தேர்தலுக்காக வேலை செய்வதற்கு மக்கள் தயார் என்றால் நானும் தயார்.

கோத்தபாய ராஜபக்ஷ எந்தவொரு இடத்திலும் வேட்பாளராகத் தயார் என்று கூறவில்லை. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இப்போது அவசரப்படவேண்டிய அவசியமில்லை என தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## வடக்கில் இரு...

களும் ஏற்படும் எனவும், இதனால் குளிரைத் தாங்கக் கூடிய உடைகளை அணிந்திருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் அதிகுறைந்த வெப்ப நிலையின் அளவு 18.5பாகை செல்சியசாகக் காணப்பட்ட அதே வேளை அதிகூடிய வெப்பநிலை 29 பாகையாகக் காணப்பட்டது.

அடுத்து வரும் தினங்களுக்கும் இதே நிலைமை தொடரும். பனிப்பொழிவின் ஒரு வடிவமான (மிஸ்ட்) மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கின்றது. மறுநாள் காலை 7.30 மணி வரை தொடரும். இதனால் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் நடமாடும் போது டும் குளிரைத் தாங்கக் கூடியவாறு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது.

இந்த நிலைமை இரண்டு வாரங்களாவது நீடிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதால், பாதுகாப்பாக இருப்பது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்க உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)

## சிறைக்கைதி ஒரு...

இவ் விடயம் பற்றி அறியவருவதாவது, ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் சிறைவாசம் பெற்று வந்த கொழும்பு மருதானையை சேர்ந்த 41 வயதுடைய கேசவன் சசிகுமார் என்ற நபர் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலதிக விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டு வருகிறார். (ம-250-281)

## தமிழ் மக்களுடன்...

இலங்கையிலுள்ள சீன தொழில் முயற்சி திட்ட வளாகங்களில், இலங்கையின் மொழிக்கொள்கை பின்பற்றப்படுவதில்லை. விசேடமாக, தமிழ் மொழி புறக்கணிப்புக்கு உள்ளாகிறது என்ற புகார் சமீப காலங்களில் மேலெழுந்துள்ளது. இவை பற்றி சீன தூதுவரை சந்தித்து நேரடியாக கலந்துரையாட விரும்புவதாக, தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சு, கொழும்பிலுள்ள சீன தூதரகத்துக்கு அறிவித்திருந்தது.

அதையடுத்து, அமைச்சர் மனோ கணேசனை, தனது அதிகாரபூர்வ இல்லத்துக்கு வருகை தரும்படி சீன தூதுவர் செங் யுவான் விடுத்த அழைப்பை அமைச்சர் மனோ கணேசன் ஏற்றுக்கொண்டதையடுத்து நேற்று இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இலங்கையில் இடம்பெறும் சீன அபிவிருத்தி மற்றும் தொழிற்றிட்டங்களின் பெயர்ப் பலகைகளில், தமிழ் மொழியைத் திட்டமிட்டு அவமதிக்கும் நோக்கம் கிடையாது என்றும், இனிமேல் சீன நிறுவனங்களின் பெயர்பலகைகள் இலங்கையில் அமைக்கப்படும் போது தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள் அமைச்சுடன் கலந்துரையாடிய பின்னர் அவற்றை அமைப்பதற்காக, வர்த்தகப் பிரிவு அதிகாரியை தான் நியமிப்பதாகவும் சீனத் தூதர் இதன்போது கூறியுள்ளார்.

இதுவரை அமைக்கப்பட்டுள்ள தொழிற்திட்டங்களின் பெயர் பலகைகளில் உள்ள எழுத்து பிழைகள் அல்லது மொழி புறக்கணிப்பு போன்றவை படிப்படியாக திருத்தப்படும் என்று உறுதியளித்துள்ள அவர், அவற்றுக்கு மொழிபெயர்ப்பு போன்ற விடயங்களுக்கு அமைச்சை நாடுவதாகவும், இனிமேல் சீன நிறுவனங்களின் பெயர்பலகைகள் அமைக்கப்படும் போது அமைச்சுடன் நிச்சயமாக கலந்துரையாடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். இதன்போது பதிலளித்த அமைச்சர் மனோ கணேசன்,

சீன தொழிற்றிட்டங்களின் பெயர் பலகைகளில் தமிழ் மொழி புறக்கணிப்பு தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும், இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகியவை தேசிய அரசகரும மொழிகள் என்றும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகும் என்றும் விளக்கமளித்தார்.

அத்தோடு, இந்த மொழி விவகாரங்களுக்காக நியமிக்கப்படும் அதிகாரியுடன் இணைந்து செயற்படுவதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் பணிப்பாளரை நியமிப்பதாகவும் அவர் கூறினார். (ம-3)

## புகையிரதத்துட...

குலைந்த நிலையில் இருப்பதால் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு தென்மராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இளங்கீரன் தெரிவித்துள்ளார். (ம-9)

## புதிய அரசியலமை...

தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவொன்று நேற்று தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் அஸ்கிரிய பீட மகாநாயக்கரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டுள்ளது. இதன்போதே தேரர் இவ்வாறு கூறியுள்ளார். (ம-3)

## நாட்டை தாரை...

மாட்டோம் எனவும் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

மல்வத்து பீட மகாநாயக்கரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

நாம் நெஞ்சில் நாட்டுப் பற்றாளன் என பச்சை குத்திக் கொள்ளாது போனாலும் எமக்கு நாட்டுப் பற்றுள்ளது. நாம் இந்த நாட்டில் பிறந்தவர்கள். இந்த நாட்டில் வாழ்கின்றவர்கள். இந்த மண்ணுக்குள் செல்லவுள்ளவர்கள்.

நாட்டுக்குப் பொருத்தமில்லாத எந்தவொன்றையும் நாம் செய்யமாட்டோம். நாமும் மக்களின் பிரதிநிதிகள். விசேடமாக எமது ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்தும் எமது பிரதிநிதிகளிடமிருந்தும் இதுபோன்ற எந்தவொரு செயல்பாட்டையும் எதிர்பார்க்கவும் வேண்டாம் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றதாக கூறப்படுகின்றதே என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் கேட்டதற்குப் பதிலளிக்கையில் இதனைக் கூறினார். (ம-3)

## சுமந்திரனின் பகி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஒன்றிணைந்து செயற்பட மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் நாம் இணைந்து பயணிக்கத் தயாராகவே இருக்கிறோம்.

சாதாரண மக்களின் தேவைக்காகவும், அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவும் எந்தவொரு தரப்புடனும் இணைந்து பயணிக்க நாம் தயாராகவே இருக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக உண்மையாக செயற்பட்ட ஒரு தலைவர், மகிந்த ராஜபக்ஷதான் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவரது காலத்தில் தான் வடக்கு மாகாணத் தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 1987 ஆம் ஆண்டுமுதல் இருந்தாலும், வடக்கு தேர்தலை நடத்த முடியாத நிலை தான் காணப்பட்டது என சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார். (ம-3)

## நீதிமன்ற உத்தர...

கொண்டு விட்டார் என்று சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் மன்றுரைத்தார்.

சந்தேகநபருக்கும் இப்போதும் ஏழரைச் சனி உள்ளது. அதனால்தான் அவர் விளக்கமறியலுக்குச் செல்கிறார் என்று தெரிவித்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சாரதி ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். அவர் அரச திணைக்களம் ஒன்றில் சாரதியாகப் பணியாற்றுகின்றார். அவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று குற்றச்சாட்டுப் பத்திரம் தயாரித்த போது, அவர் கடந்த வருடம் நடுப்பகுதியிலும் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என்பது தெரியவந்தது.

அப்போது அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிமன்றால் அவரது சாரதி அனுமதிப் பத்திரம் ஒரு ஆண்டுக்கு இடைநிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனினும் அந்தத் தடைக்காலப் பகுதிக்குள் அந்தச் சாரதியிடம் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளமை கண்டறியப்பட்டது.

அதுதொடர்பில் சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், எனது சாரதி அனுமதிப்பத்திரம் தொலைந்துவிட்டது என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் அறிக்கை வழங்கப்பட்டது. அதனைப் பயன்படுத்தி புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டேன் என்று தெரிவித்துள்ளார். (ம-9)

# இ.போ.ச நடத்துநர் மீது தாக்குதல்; இருவர்கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா எட்டாம் கட்டை பகுதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இ.போ.ச நடத்துநர் மீது தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் சேர்ந்து தாக்குதல் மேற்கொண்டதில் காயமடைந்த இ.போ.ச ஊழியர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து பூவரசங்குளம் ஊடாக செட்டிக்குளம் நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்தினை எட்டாம் கட்டை பகுதியில் வவுனியாவிலிருந்து வாரிக்குட்டியூர் நோக்கி பயணித்த தனியார் பேருந்தினர் வழிமறித்து எனது நேரத்தில் நீங்கள் செல்வதாக தெரிவித்து ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் போது இ.போ.ச நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்டதில் 31 வயதுடைய தா.விக்கினேஸ் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பூவரசங்குளம் பொலிஸார் குறித்த தனியார் பேருந்தின் நடத்துநர், சாரதியினை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-281)

# தேர்தல் நடத்தாமை தனிப்பட்ட ரீதியில் கவலையளிக்கிறது!

## - மகிந்த தேசப்பிரிய

புதிய முறைமையில் தேர்தலை நடத்த முடியாத நிலைமையே தற்போது காணப்படுகின்றது. எனவே விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமாயின் பழைய முறைமையில் நடத்துவது சாத்தியமாகும் என தெரிவித்த சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, தேர்தல்கள் நடத்தப்படாமை தனிப்பட்ட ரீதியில் தனக்கு கவலையளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டுமெனக் கோரியும், அதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடுவதற்கு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவில் அதன் தலைவரை கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சந்தித்திருந்தனர். இதன்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3)

## வடக்கின் பதவி...

கடமைகளை நேற்று பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இனி பாராளுமன்றத்தில் அனைத்து பிரதேச மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் குரலெழுப்பப்படும். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை தட்டிக் கேட்கும் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு, உட்பட அனைத்து மாகாணங்களின் அடிப்படை பிரச்சினைகள், மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் தொடர்பில் இனி எவ்வித வேறுபாடுகளுமின்றி எடுத்துரைக்கப்படும். மக்களின் பிரச்சினைகள் பற்றி எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து சுட்டிக்காட்டாமையின் விளைவே அரசாங்கம் தான் தோன்றித்தனமாக செயற்பட வழியேற்படுத்தியுள்ளது என்றார். (ம-3)

### மஹஜன சம்பத

திகதி 2019/01/18
சீட்டிழுப்பு இலக்கம் 3836
ஆங்கில எழுத்து: T
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 5 9 5 1 1
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.01.18
சீட்டிழுப்பு இலக்கம் 2008
ஆங்கில எழுத்து: O
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 23 40 67 77
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2019-01-18
சீட்டிழுப்பு இலக்கம் 103
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 06 16 22 57
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 18/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 333
வெற்றி எழுத்து: G
சுப்பர் இலக்க: 11
வெற்றி இலக்கங்கள்: 19 41 51 66
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர் (Administration Officer) பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

வயது :-18-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 15000/-

V2 TRAVELS

15/1 மாநகரசபைக் கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

0768226243
v2vacancies@gmail.com

(C-5172)


## 'ஒருமித்த...

அரசியல் அமைப்பு தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அப்பால் பாராளுமன்றத்திற்கு தெரியாமல் அரசியல் அமைப்பினை தயாரிக்க முடியாது.

அரசியல் அமைப்பின் ஒவ்வொரு அத்தியாயங்கள் தொடர்பிலும் பாராளுமன்றமே இறுதி தீர்மானத்தை எடுக்கும்.

மேலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு பல வருடங்களுக்கு பிறகு தமிழ் அமைப்புகளின் ஒத்துழைப் பினை பெற்றுக்கொண்டதும் தெற்கு பிரதிநிதி களுடன் தமிழ் பிரதிநிதிகளிடத்திலும் நல்லுறவினை ஏற்படுத்தியதே எங்களின் முதல் வெற்றியாகும்.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் எந்தவித ஒப்பந்தங்களும் இல்லை. தெற்கில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் போன்று வடக்கிலும் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கோருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

லக்ஷ்மன் கிரியெல்ல, ரஞ்சித் மத்தும பண்டார, பாலித ரங்கே பண்டார மற்றும் தயா கமகே உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வெள்ளிக்கிழமை மல்வத்து மகாநாயக்க தேரர் மற்றும் மெதகம தம்மானந்த தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டதுடன் புதிய அரசியல் அமைப்பு தொடர்பாகவும் அவர்களிடம் கலந்துரையாடியிருந்தனர்.

அதன்பின்னர் கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே லக்ஷ்மன கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)


# FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 28.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-5186)



# உடனடி வேலை வாய்ப்பு

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் பிரபல உணவகத்திற்கு

- றொட்டி,றைஸ் தயாரிப்பவர்
- சிற்றுண்டி தயாரிப்பவர்
- சமையலர் ஆகியோர் உடனடியாக வேண்டப்படுகின்றனர்.

வயதெல்லை :- 20 - 50 வயது.
அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு- 0771784850

(C-5200)



# மணமகள் தேவை

1971 இல் பிறந்த சுவிஸ் பிரஜை, பூரம், சிம்மம், யாழ் இந்து கௌரவ பெற்றோர் படித்த அழகிய இந்து மணமகளைத் தேடுகின்றனர். தொடர்பு : இலங்கை - 076 463 8598

Viber : - +41791941930

E.Mail :- m.samy@gmx.ch

(C-5164)



# British College of Higher Studies

ஆங்கிலம் / சிங்களம்

Certificate course in English / Sinhala

Diploma in English / Sinhala

>>> அடிப்படையிலிருந்து
>>> உங்களுக்கு வசதியான நேரங்களில்...
>>> அனைத்து வயதினருக்குமானது.
>>> Writing, Listening, Speaking, Reading

வெளிநாடு செல்பவர்க்கான கற்கை நெறிகளான Student visa, Migration visa மூலம் செல்பவர்க்கு

☞ IELTS Academic/ General

Settlement visa மூலம் செல்பவர்க்கு

☞ IELTS Life skill A1 Exam

15, Stanley Road,
Sirambiyady lane, Jaffna.
(லங்கா சதொச மேல் மாடி)
021 222 4550 / 076 138 0212

(C-5201)



# விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

மானிப்பாய் 0768226240
யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி
நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-5112)



# பயிர்ச்செய்கை நிலம் தேவை

வன்னிப்பிரதேசத்தில் (கிளிநொச்சி, முல்லைத் தீவு, புதுக்குடியிருப்பு, விசுவமடு) நீர்வசதியுடன் கூடிய 25 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிர்ச்செய்கை நிலம் (எல்லாப் போகங்களுக்கும் செய்யக் கூடிய நிலம்) மற்றும் சிறுபயிர்ச்செய்கை செய்யக் கூடிய நிலமும் குத்தகைக்கோ அல்லது விற்பனைக்கோ தேவை.

தொடர்பு : 076 463 8598

(C-5165)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# ஷன் பாடசாலை சேவை

நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஊடாக யாழ் நகரப் பாடசாலைக்கிடையேயான பாடசாலை சேவையில் ஈடுபடும் எமக்கு மாணவர்கள் தேவை.

## எமது சேவையானது



- பாடசாலை சேவையில் 17 வருடங்களுக்கு மேலான அனுபவம் மிக்க சேவை
- அனுபவமும், பொறுப்பும் மிக்க சாரதிகள்
- சொகுசான இருக்கைக்களவான சேவை
- மகளிர் பாடசாலைகளுக்கு பிரத்தியேக சேவை.

மேலதிக தொடர்புகளுக்கு
வலம்புரி T.C நவாலி - 0777393078 Viber : 0767626106

(C-5191)






f jitf.lk
www.jitf.lk

JITF 2019

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

# தவறாதீர்கள்

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

25TH, 26TH, 27TH JANUARY | 10.00AM - 8.00PM

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்

More information: RIZWAN +773 959 835 | rizwan@saexhibitions.com

PLATINUM SPONSOR INSEE CEMENT | GOLD SPONSOR Browns A Heritage of Trust | ORGANIZED BY LECS LANKA EXHIBITION | IN ASSOCIATION WITH CCIY

OFFICIAL PARTNERS: ASIRI HEALTH, PEOPLE'S BANK, Sri Lanka Telecom Mobitel, NINEWELLS, i-ROOF, mC creatives

SUPPORTED BY — ENDORSED BY

(7150)



# காசி சீரடிபாபா யாத்திரை

ஆரம்பம் 09.03.2019, நாட்கள் - 12, யாத்திரிகர் - 15

**தரிசிக்குமிடங்கள்**

**டெல்லி,** அட்சயதாம், நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற், வேறு இடங்களும் பார்க்கலாம். **ஆக்ரா,** தாஜ்மகால், செங்கோட்டை. **மதுரா,** கிருஷ்ணஜென்ம பூமி, பிரேம்மந்திரம். **அலகாபாத்,** கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், **கயா,** முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிராத்தம் செய்யும் இடம். **புத்தகாய,** புத்தாலயங்கள் **காசி,** விஸ்வநாதர், விசாலாட்சி, காளபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்.

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் **காசியில் 3நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம். சனி சிங்கனாப்பூர்,** இன்னும் பல இடங்களும் போகலாம். **சீத்தாமடி,** சீதை பூமியுள் புதையுண்ட இடம். **திரியம்பகேஸ்வரர்,** ஜோதிலிங்கமும் மற்றும் **இராமேஸ்வரம்** 21 தீர்த்தமாடல். இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்). **நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோசமங்கை** பார்த்து **மதுரை மீனாட்சி** தரிசனம் முடித்து சென்னை வருகை.

1 நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்.

## பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்.

5 விமானப் பயணங்கள், 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களை கேட்டு பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் / மகன் ராஜன்
59 - 3/6 செட்டியார் தெரு கொழும்பு - 11
T.P - 0777680102 / 0777362154

(C-5195)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org